விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 25 வெள்ளிக்கிழமை (11.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 357




# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர்

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு

## இந்தியாவிடம் இலங்கை அரசு உறுதி

(புதுடில்லி)

ஜனாதிபதித் தேர்தல் நிறைவு பெற்ற பின்னர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என இந்தியாவிடம் இலங்கை அரசு உறுதியளித்துள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர் குறித்து விசாரிக்க பொன்சேகா உறுதியளிப்பு-மனோ எம்.பி.

(யாழ்ப்பாணம்)

வன்னி இறுதி யுத்தத்தில் கைது செய்யப்பட்டவர்கள், காணாமல் போனோர்கள், போராளிகள் தொடர்பில் தனித்தனியான தேசிய சபைகளை அமைத்து விசாரணை செய்வதாக ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தன்னிடம் உறுதியளித்ததாக மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட போதே நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை (16ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்களை தடுக்க அனைவரும் உழைக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

(கொழும்பு)

பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், விரும்பிய அரசியல் கட்சிகளை சுயமாகத் தெரிவுசெய்யும் சுதந்திரம், விரும்பிய இடங்களை நோக்கிய நடமாடும் சுதந்திரம், அச்சத்தில் இருந்தும், வறுமையில் இருந்தும் விடுதலை பெறுதல் என மனிதன் பூரண இன்பத்துடன் வாழ முடிந்த உலகத்தின் வருகையே சாதாரண மக்களின் மிக உயர்ந்த குறிக்கோளாக இருந்து வருகிறது என சமூகசேவைகள் (16ஆம் பக்கம் பார்க்க)


## சுயநிர்ணய உரிமையை அரசு வழங்க வேண்டும்

## மாவை எம்.பி. வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தன்னைத்தானே ஆளுகின்ற சுயநிர்ணய உரிமை அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும். அதனை சர்வதேசமும் உறுதிப்படுத்த வேண் டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, (16ஆம் பக்கம் பார்க்க)





மனித உரிமை தினத்தை முன்னிட்டு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மனோ கணேசன் எம்.பி., மாவை சேனாதி ராஜா எம்.பி. உள்ளிட்ட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

### வாழ்த்துகின்றோம்

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறு பெற வாழ்த்துகின்றோம்.

கல்விப்பிரிவு,
வலம்புரி.

### நாளை முதல் ...

தமிழகத்தின் பிரபல
சோதிடர்
சிவல்புரி சிங்காரம் எழுதும்
'குருப்பெயர்ச்சிப் பலன்கள்'
உங்களுக்கு எப்படி?

## பொலிஸ் சேவையில் மற்றுமொரு தொகுதி தமிழ் இளைஞர்கள் இணைக்கப்படுவர்

## வட மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை தமிழ் மொழியில் தெரிவிக்கவும் பொலிஸ் சேவையை தமிழ் மக்களுடன் நெருக்க மானதாக வலுப்படுத்தவும் விரைவில் மற்றுமொரு தொகுதி தமிழ் இளைஞர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப் போவதாக வடமாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் நிமால் லியூகே தெரிவித்துள்ளார்.

யாழ். வேம்படி (16ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் யாழில் நேற்று சிறப்புற அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் சிறப்பாக அனுஷ்டிக்கப் பட்டது. மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் மரம் நடுதல், அரசியல் பிரதிநிதிகளின் சிறப்புரை, கலை நிகழ்வுகள், பேரணி மற்றும் தீபம் ஏற்றி அனுஷ்டிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. (16ஆம் பக்கம் பார்க்க)

NSP EXERCISE BOOK



மாணவ மணிகளுக்கோர் நற்செய்தி

எழுத்துகளுக்கு மேலும் அழகு சேர்க்கும் உங்கள் தோழன்
NSP அப்பியாசக் கொப்பிகள்



உங்களுக்கு தேவையான NSP அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகள் மிகவும் மலிவான வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

இடம்: 30 வருட நிறைவை யொட்டி மாபெரும் மலிவு விற்பனை நிலையம் சுந்தர்சன் மானிப்பாய்

காலம்: 12.12.2009 சனிக்கிழமை தொடக்கம் T.P: 071 861 7918

(4165)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் இன்று ஆரம்பமாகும் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குக் கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை மண்டபம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (சா/த) பழையப் பாடத் திட்ட அனுமதியட்டையில் பரீட்சை நிலையம் யா/உடுவில் மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் II எனக் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை யா/இராமநாதன் கல்லூரி மண்டப இலக்கம் III இல் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பழைய பாடத் திட்ட அனுமதியட்டையில் பரீட்சை நிலையம் யா/உடுவில் மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் II எனக் குறிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் இம் மாற்றத்திற்கு அமைய யா/இராமநாதன் கல்லூரி மண்டப இலக்கம் III க்குச் செல்லுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)


15/12/2009-ல்

V.A.

(4160)


## தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட நிர்வாக சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

கூட்டத்தில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ம.மகாசிவம் கலந்து கொள்கின்றார். கிளைச் சங்கத் தலைவர்கள்; செயலாளர்கள்; மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் தாய்ச் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


ஞானோதயா அக்கடமி
சாவகச்சேரி

A/L 2010 DAY CLASS

ஆரம்பம் 12/12/2009 காலை 11 மணி.

எமது வழமையான புகழ் பெற்ற ஆசிரியர் குழு.

(□□3904)


# யாழ்.ஸ்ரான்லி வீதியில் சிப்பாய் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் அருகாமையில் நேற்று நண்பகல் சிப்பாய் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் 14-வது கைமுனு படையணியைச் சேர்ந்த லியனகே மகேஷ் குமார (வயது -20) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் 4 இராணுவச் சிப்பாய்களுடன் மக்கள் வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் சென்று சிறிது நேரத்தில் அங்கிருந்து தனியாகத் திரும்பி வங்கிக்கு அருகாமையில் தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாக மரண விசாரணை யின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மேலதிக நீதிவான் ஆர். வசந்தசேனன், பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தைக் கொழும்புக்கு அனுப்புமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை அரியாலைப் பகுதியிலும் நேற்று முன்தினம் பலாலி வீதி, திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியிலும் இராணுவச் சிப்பாய்கள் இருவர் தம்மைத் தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-7,14)


கருத்தரங்கு

GENERAL INFORMATION TECHNOLOGY (GIT)

A/L 2010

(ARTS, COMMERCE, SCIENCE, MATHS)

இடம்: Jaffna Technical Institute Conference Hall
இல.45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (Beacon அருகில்)

நேர அட்டவணை

| திகதி | கிழமை | விடயம் | நேரம் |
|---|---|---|---|
| 12.12.2009 | சனி | Theory | 10-12, 2-4 |
| 13.12.2009 | ஞாயிறு | Practical (Multimedia) Projector with Laptop | 9-11, 2-4 |

பரீட்சை நடைபெறும் திகதி 20.12.2009 கட்டணம்: ரூ 300.00 மட்டுமே

குறிப்பு: I கிடைக்கப்பெற்ற மாதிரி வினா-விடைத் தொகுப்புகள் வழங்கப்படவுள்ளன.
II 2007, 2008 பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற மாணவர்களை வாழ்த்துகின்றோம்.
III தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நட்சத்திர விரிவுரையாளர்கள் இணைகின்றனர். ஒழுங்கு செய்யப்பட்ட அனைத்து கருத்தரங்குகளும் இங்கு மாற்றப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

(C-3908) - நிர்வாகம்


## நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்

### பகிரங்க ஏலவிற்பனை- 2009

இம்மன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்களை 12.12.2009 அன்று பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.ஏலவிற்பனை காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் கொடுக்க வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர் (□□3905)

# மரண அறிவித்தல்

## திருமதி

## இந்திரகுமார் பங்கயச்செல்வி



சிலம்புப்புளியடி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரகுமார் பங்கயச்செல்வி கடந்த (08.12.2009) செவ்வாய்க்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் ஸ்ரீகணநாதன் (ஆயுர்வேத வைத்தியர்) செல்வமலர் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், கந்தசாமி (கந்தசாமி அன் சன்ஸ்) தவமணிதேவி தம்பதியினரின் அன்பு மருமகளும், இந்திரகுமார் (கந்தசாமி அன் சன்ஸ்) இன் அன்பு மனைவியும், பேரருட்செல்வி, திருவருட்செல்வி, குகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

சிவகுமார் (ஜேர்மன்), இராசகுமார் (ஜேர்மன்), சித்திரா (சுவிஸ்), செல்வரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மாலா, சிவந்தினி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், பிரவீணன் (ஜேர்மன்), பிரித்தா(ஜேர்மன்), பிரவீணா (ஜேர்மன்) ஆகியோரின் சித்தியும், முருககுமார் (சுவிஸ்), யுதிஷா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், கஜதாஸின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.12.2009) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
இந்திரகுமார் (கணவர்)
கந்தசாமி அன் சன்ஸ், சங்கானை.

சிலம்புப்புளியடி,
சங்கானை

(4166)

# இன்று ஒரு தகவல்

## தாயும் மகனும்

ரயிலொன்று வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அதில் ஒரு பெரிய அதிகாரி போய்க் கொண்டிருந்தார். ஒரு ஊரில் ரயில் தரித்து நின்றதும் அந்த அதிகாரி அதிலிருந்து இறங்கி ''கூலி.. கூலி...'' என்று கூப்பிட்டார்.

அதே ரயிலில் வந்த இன்னொருவர் இதைக் கவனித்தார். உங்கள் ''லக்கேஜ்'' எது என்று கேட்டார்.

இதற்கு அவர் தன்னுடைய கைப்பையைக் காட்டி ''இது தான் என் லக்கேஜ்'' என்றார். அது ஒரு சிறிய பைதான்.

''இதற்காகவா சுமை தூக்குபவரைக் கூப்பிடுகிறீர்கள். என்னிடம் கொடுங்கள்... நான் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்றார்.

அந்த அதிகாரியும் பதிலெதுவும் பேசாமல் அந்தப் பையை அவரிடம் கொடுத்தார். அவரும் அதைச் சுமந்து கொண்டு போனார். போக வேண்டிய இடம்வரையும் சென்று பையை அதிகாரியிடம் கொடுத்தார்.

அவர் அதை வாங்கிக் கொண்டு ''கூலி எவ்வளவு?'' என்று கேட்டார்.

அதற்கு அவர் ''கூலி வேண்டாம் இதை என்னுடைய சேவையாகக் கருதி வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார்.

அவர் போனபின் இந்த அதிகாரி தான் செல்ல வேண்டிய இடத்துக்குப் புறப்பட்டார்.

அவர் ஒரு பெரிய பேச்சாளரது பேச்சைக் கேட்பதற்காக அங்கே வந்திருந்தார். ஏகப்பட்ட கூட்டம். ஒருவாறு முண்டியடித்துக் கொண்டு ஓரிடத்தில் போய் உட்கார்ந்தார்.

மேடையில் அறிவிப்பு வந்தது. இப்பொழுது ஈஸ்வர சந்திர வித்யாசாகர் பேசுவார் என்று சொன்னார்கள்.

அவ்வளவு தான்... எல்லோரும் ஆவலோடு மேடையைப் பார்த்தார்கள்.

ஈஸ்வர சந்திர வித்யாசாகர் மேடைக்கு வந்தார். இவருக்கு ஆச்சரியமாகிவிட்டது. ரயில் நிலையத்தில் தன்னுடைய லக்கேஜை சுமந்தாரே... அவர்தான் மேடையில் நின்றார். அவரைப் பார்த்தவுடன் இவர் தன்னுடைய செயலுக்காக வெட்கப்பட்டாராம்.

வித்தியாசகர் மிகவும் பெரிய மனிதர். இருந்தாலும் அவருடைய குடும்பம் வறுமையால் வாடியது. வீட்டில் வயதான தாயார் இருந்தார்.

இவர் படித்து முடித்ததும் ஓர் உத்தியோகத்தில் சேர்ந்தார். சம்பாதிக்கும் பணத்தை சிக்கனமாகச் செலவு செய்தார். மிச்சத்தை கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்தார்.

அம்மா உடுத்திருந்த கந்தல் ஆடையைப் பார்த்தார். இவருக்கு மனம் உறுத்தலாக இருந்தது.

ஒருநாள் அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து ''அம்மா! நான் கொஞ்சப் பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். உனக்கு ஆசை ஏதாவது இருந்தால் சொல்லு... அதை நிறைவேற்றி வைக்க முயற்சி செய்கிறேன்'' என்றார்.

''மகனே! எனக்கு எந்த ஆசையும் இல்லை. நீ நல்ல குணமுடையவனாக இருந்தால் போதும்'' என்றார் அந்த அம்மா.

சிறிது நாட்களில் இவருக்குப் பெரிய உத்தியோகம் ஒன்று கிடைத்தது. வருமானமும் ஆயிரக்கணக்கில் வந்தது.

''அம்மா இப்பாவது சொல்லு... உன்னுடைய ஆசை எதுவாக இருந்தாலும் நிறைவேற்றி வைக்கிறேன் என்றார்.

இப்பொழுது அந்த அம்மா சொன்னார்.

''மகனே எனக்கு ஒரு ஆசை இல்லை... மூன்று ஆசைகள் உண்டு. அதை நிறைவேற்றினால் என்மனம் அமைதியடையும்'' என்றார்.

''என்னம்மா அதை உடனே சொல்லுங்க'' என்றார்.

''மகனே! நம்முடைய கிராமத்தில பிள்ளைகள் படிப்பதற்கு வசதியில்லை. அதனால் ஒரு பள்ளிக்கூடம் கட்டு. நம்மக்களை சரியாக கவனிப்பதற்கு யாருமில்லை. அதனால் ஒரு ஆஸ்பத்திரி கட்டு. மக்கள் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்... அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்'' என்றார்.

அவர் உடனே பள்ளிக்கூடம் கட்டினார். ஆஸ்பத்திரி கட்டினார். குடிநீர் கிணறுகளைத் தோண்டினார். அவர்தான் ஈஸ்வர சந்திர வித்யாசாகர்.

அம்மா – பிள்ளை என்றால் இப்படி இருக்க வேண்டும். இன்றைக்கு இப்படியா இருக்கிறார்கள்?

ஒரு சின்னப்பையன் அம்மாவிடம் போய்,

''எனக்கு டிரம்ஸ் வாங்கிக் கொடுங்க'' என்று அடம்பிடித்தான்.

''மகனே! நீ டிரம்ஸ் வாசித்தால் வீட்டுக்குள் நானும் அப்பாவும் நிம்மதியாக தூங்க முடியாது. ஒரே இடைஞ்சலாக இருக்கும்'' என்றார் அந்த அம்மா.

''உங்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் நான் வாசிப்பேன்'' என்றான் பையன்.

''எப்படி?'' என்று கேட்டார் அம்மா.

''நீங்கள் இரண்டுபேரும் தூங்கிய பின் வாசிப்பேன்'' என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஏ எச்1 என்1 வைரஸ் தொற்றியோரும் பரீட்சை எழுத கல்வியமைச்சு அனுமதி

(கொழும்பு)

நொவெல் இன்ஃப்ளுவென்சா எனப்படும் ஏ எச் 1 என் 1 வைரஸ் அறிகுறிகள் காணப்படும் மாணவர்களும் இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றலாமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் தொற்று அறிகுறிகள் காணப்படும் மாணவருக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது என வெளியாகியுள்ள செய்திகளில் எவ்வித உண்மையுமில்லையென கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய மாகாணத்தில் நொவெல் இன்ஃப்ளுவென்சா வைரஸ் தொற்று 50 சதவீதமளவில் குறைந்துள்ளதாக அம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சாந்தி சமரசிங்க தெரிவிக்கிறார்.

இந்த வைரஸ் தொற்றுக்குள்ளான நான்கு நோயாளர்கள் மாத்திரமே தற்போது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே 7 நோயாளர்கள் இந்நோய்த் தாக்கத்தில் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# பிளாஸ்ரிக் வாளிகள், சமையலறை உபகரணங்கள் கையளிப்பு

(அல்வாய்)

உலக உணவுத் திட்டமும் யுனிசெப் நிறுவனமும் இணைந்து யாழ். மாவட்டத்திலுள்ள 7 கோட்டங்களுக்கென பிளாஸ்ரிக் வாளிகள் மற்றும் சமையலறை உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளன.

இப்பொருட்கள் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதில் தென்மராட்சி வலயத்திற்கு 423 வாளிகள் மற்றும் 99 சமையலறை உபகரணங்களும், தீவக வலயத்திற்கு 367 வாளிகளும் 100 சமையலறை உபகரணங்களும், வடமராட்சி கல்வி வலயத்திற்கு 403 வாளிகள் உட்பட 212 சமையலறை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஏ.வி. ஜெயரூபன் அறிவித்துள்ளார். (ஓ-6-19)

# பரீட்சையை முன்னிட்டு 3 இலட்சம் அடையாள அட்டைகள் விநியோகம்


## ஆட்பதிவுத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சையை முன்னிட்டு 3இலட்சத்துக்கும் மேற்பட்ட தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுவிட்டதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஏ.பி. தர்மதாஸ தெரிவித்தார்.

அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் அனைவருக்கும் இவ்வாறு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அதன்படி கடந்த செவ்வாய்க் கிழமை வரை 3,10,405 தேசிய அடையாள அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிட்டார். (ஓ-6)



உரும்பிராய் ஸ்ரீ காமாட்சியம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற கவிமணி அன்னைதாசன் குழுவினரின் 'அமாவாசையில் அம்புலி' என்ற தலைப்பிலான இசைச் சொற்பொழிவு நிகழ்வில் தலைவர் எஸ். தர்மலிங்கம் அறிமுகவுரை ஆற்றுவதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

11-12-2009
(கார்த்திகை 25 வெள்ளிக்கிழமை)
தசமி மாலை 6.09 மணிவரை
அத்தம் பிற்பகல் 2.30 மணிவரை
இராகுகாலம் 10.49-12.19 மணிவரை
சுபநேரம் 6.19-7.49 மணிவரை
பாரதியார் பிறந்த தினம்

| | |
|---|---|
| மேடம் | பணவருவாய், தெய்வ தரிசனம், எடுத்த காரியம் கைகூடும், தேக நலன். |
| இடபம் | வியாபார நன்மை, புத்திரரால் கவலை, பணக்குறைவு, சிறு வியாதி. |
| மிதுனம் | பயந்த சுபாவம், புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு, சுபசெலவு. |
| கடகம் | சகோதரர் உதவி, தெய்வ தரிசனம், தொழில் நன்மை, காரிய நன்மை. |
| சிங்கம் | குடும்பக் கவலை, கௌரவக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| கன்னி | தெய்வ தரிசனம், புதிய பொருள் சேர்க்கை, போசன நன்மை, தொழில் விருத்தி. |
| துலாம் | உணர்ச்சி வசப்படல், பிதா சிந்தை, இடமாற்றம், கௌரவக் குறைவு. |
| விருச்சிகம் | தெய்வ தரிசனம், நண்பர்கள் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், தனவரவு. |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| மகரம் | ஆன்றோர் சந்திப்பு, கட்டுப்பாடு, திடீர் பயணம், தொழில் நன்மை. |
| கும்பம் | எதிர்பாராத பகை, காரிய தாமதம், பணக்குறைவு, மரியாதைக் குறைவு. |
| மீனம் | களஸ்திர நன்மை, பிரயாண சுகம், தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 150 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 55 | 75 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 20 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 140 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | -- | -- | 160 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 100 |
| போஞ்சி | -- | -- | 160 |
| கத்தரி தம்புள்ள | 120 | 140 | 80 |
| கீரை – 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 140 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |

## 'ஞானதீபம்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதிய "ஞானதீபம்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன் கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை நீர்வைமணி சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள் ஆற்றவுள்ளதுடன் நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ இ.சுவாமிநாதக் குருக்கள் நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

முதற்பிரதியை இ.ச.பேரம்பலம் சக நிறுவன உரிமையாளர் இ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுகொள்ளவுள்ளார்.

நூல் நயப்புரையை பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) வழங்கவுள்ளார். (ஓ-9)

## பரீட்சை மண்டபம் மாற்றம்

க.பொ.த.(சா/த) பரீட்சை -2009 பழைய பாடத்திட்டத்தில் யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.மண்டப இலக்கம் 3 இல் தோற்றும் பரீட்சார்த்திகளிற்குரிய மண்டபம் மாற்றப்பட்டு மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெறும் பரீட்சார்த்திகள் மாற்றப்பட்டு புதிய மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

### கிளிநொச்சிப் பகுதியில்

## மூன்று பாடசாலைகள் ஆரம்பிக்க தயார் நிலையில்

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி, கரைச்சி பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு தயார் நிலையில் இருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கனகபுரம் மகாவித்தியாலயம், உருத்திரபுரத்திலுள்ள கிளிநொச்சி இந்துக் கல்லூரி, உருத்திரபுரம் பற்றிமா அ.த.க. பாடசாலை ஆகியவையே திறக்கப்படவுள் ளன.

அத்துடன் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சசபையும் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தனது அலுவலகத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகாமையில் திறக்கவுள்ளது.

ஏற்கனவே இம்மக்களின் வசதிகருதி கிளிநொச்சியிலிருந்து முறிகண்டியூடாக மன்னார் வரை பேருந்து சேவை நடைபெற்று வந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் கிளிநொச்சியிலிருந்து ஸ்கந்தபுரம், ஜெயபுரம், பூநகரி, வெள்ளாங்குளம், முழங்காவில், துணுக்காய் ஆகிய பகுதிகளுக்கும் சென்று வர 2 பேருந்துகள் சேவையிலீடுபட தொடங்கியுள்ளன.

மேலும் பேருந்துகளில் கடமைக்குச் செல்லும் அரச ஊழியர்கள் இலவசமாக சென்று வரமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## அனுமதி பெற்றே சுண்ணாம்புக்கல் அகழ்தல், உடைத்தல் தொழில்களை மேற்கொள்ளவும்

### அரசாங்க அதிபர்

கட்டட நிர்மாண வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக்கல் அகழ்வானது யாழ்.மாவட்டத்தில் முன் அனுமதியின்றி சட்டத்திற்கு முரணான வகையில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. இச்செயற்பாட்டினால் யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீர்வளம் பாதிக்கப்படுவதுடன் சுற்றுச் சூழல் மாசடையும் தன்மையும் ஏற்படுவதால் .எதிர்காலச் சந்ததிக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு கல் அகழ்வோர் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலும் கல் உடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்கள் யாழ். மாவட்ட செயலக வளவில் இயங்கும் சூழல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அலுவலகத்திலும் உரிய அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு தமது தொழில்களுக்குரிய சட்டபூர்வ ஏற்பாட்டைச் செய்யுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

தவறுபவர்கள் மீது சட்டநடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படவேண்டும் என மாவட்ட செயலக கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக செயற்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலக சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கண்காணிக்கவுள்ளனர் என யாழ்.அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## சுனாமி அனர்த்தத்தில் இறந்தவர்களின் 5ஆம் ஆண்டு நிறைவு நாள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தின் போது இறந்தவர்களின் 5ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் மணற்காடு கரையோரப் பகுதியில் உள்ள பொது இடத்தில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு வருடமும் வடமராட்சி கிழக்கு மக்கள் தங்களின் உறவுகளை நினைவுகூரும் முகமாக உடுத்துறை தெற்கில் அமைந்துள்ள சுனாமி பொது மயானத்தில் காலை 9மணிக்கு ஒன்றுகூடி தங்கள் உறவுகளின் நினைவுத் தூபிகளுக்கு மலர்மாலை அணிவித்து விளக்கேற்றி இறைவனை பிரார்த்திப்பார்கள்.

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஆயிரத்து 900 பேர் உயிரிழந் துள்ளதுடன் இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை உடுத்துறையில் அமைந்துள்ள நினைவுத்தூபிகளுக்குச் சென்று விளக்கேற்றி வர அனுமதி பெற்றுத்தருமாறு பொது அமைப்புக்களை மக்கள் கேட்டுள்ளனர். இது சாத்தியமாகாவிடில் மணற்காட்டில் உள்ள பொது இடத்தில் விளக்கேற்றி மலர்மாலை அணிவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பொது முகாமையாளர் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ)

## பரிகாரக் கற்பித்தல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்வி வலய கணித விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் செயலமர்வு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இம்மாதம் 18 ஆம்திகதி வெள்ளிக்கிழமை முதல் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முன்பு நடைபெற்ற பரிகாரக் கற்பித்தல் செயலமர்வில் கலந்துகொள்ளாத கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாள்ர் வ.செல்வராசா கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## மேலதிக பேருந்து சேவை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு குடத்தனை மணற்காட்டு பகுதியிலுள்ள சுனாமி இடைத்தங்கல் முகாம்களில், வன்னியில் இருந்து கொண்டு வந்த மக்கள் தங்கவிடப்பட்டுள்ளதால் அப்பகுதிக்கு புதிதாக பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதிக்கு ஒரு பேருந்து மட்டும் சென்று வந்து கொண்டிருந்த வேளையில் இம் மக்களின் வருகைக்குப் பின் 3 மேலதிக பேருந்துகள் சேவையில் விடப்பட்டுள்ளது.

இப்பேருந்துகள் குடத்தனை அம்பன், மணற்காடு, பொற்பதி ஆகிய இடம்வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## பனந் தொழில் வல்லுனர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம், கொத்தணிகள், சங்கங்கள் இணைந்து நடத்தும் கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர் மாநாடு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வழங்கவுள்ளார். தொடர்ந்து பனை அபிவிருத்திச் சபை முன்னாள் பொதுமுகாமையாளர் கோ. கோகுலதாசன், யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் கி. இராஜேஸ்கண்ணன், யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி க. தேவரசா, யாழ் பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் கு. மிகுந்தன், மற்றும் யாழ் பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கவுள்ளனர். தொடர்ந்து மாநாட்டு பிரகடனங் கள் வெளியிடும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஓ-9)

## கவிதை நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

ஜோ.ஜெஸ்ரினின் " வெற்றிலை நினைவுகள்" கவிதைநூல் அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் எழுத்தாளர் செ.யோசெப் பாலா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் வழங்கவுள்ளார். நூலின் முதற்பிரதியை பல்துறைப் பேராளன் எஸ்.யேசுதாஸ் பெறவுள்ளார்.

நூலின் மதிப்பீட்டுரையை கவிஞர் சோ. பத்மநாதனும் பதிலுரையை நூலாசிரியரும் வழங்கவுள்ளனர். (ஓ-9)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகளிர் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி பிறேமினி சபாரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-9)

## தவறவிடப்பட்ட துவிச்சக்கரவண்டி

(வடமராட்சி கிழக்கு)

மந்திகை பொதுச்சந்தையில் அண்மையில் அநாதரவாக விடப்பட்ட பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி சந்தை மேற்பார்வையாளரால் பொறுப்பேற்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துவிச்சக்கர வண்டியை தவறவிட்டவர்கள். தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ள முடியும் என பருத்தித்துறை பிரதேசசபை சபை செயலர் தெரிவித்துள்ளார். (ஓ-9)

## ஆயுள்வேத மருந்துகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியிலுள்ள ஆயுள்வேத திணைக்களத்தின் பதிவிலுள்ள 3 ஆயுள் வேத வைத்தியசாலைகளுக்கு நீண்டகாலத்தின் பின்பு ஏ-9 பாதையூடாக இலட்சக்கணக்கான ஆயுள் வேத மருந்துப் பொருட்கள் கொழும்பிலுள்ள ஆயுள்வேத திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆயுள்வேத மத்திய மருந்தகத்துக்கும், கரவெட்டி ஆயுள்வேத மத்தி மருந்தகத்திற்கும், தம்பசிட்டி ஆயுள்வேத கிராமிய வைத்தியசாலைக்கும் இம் மருந்துப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஓ-9)


### யாழ்.செய்திகள்

## புகையிலைச் செய்கையில் மக்கள் மும்முரம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியின் பல பகுதிகளில் புகையிலை செய்கையில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதில் குறிப்பாக மந்திகை, புலோலி, துன்னாலை, கரவெட்டி, கரணவாய், கரவெட்டி மேற்கு மற்றும் பல பகுதிகளில் மக்கள் கூடுதலான புகையிலை செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின் குடாநாட்டில் புகையிலைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் இப்பகுதி மக்கள் கூடுதலான ஆர்வம் காட்டி வருவதுடன் இதனால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கும் கூடுதலான வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது. (ஓ)



சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஆதரவாளர்களினால் அண்மையில் இரத்ததான நிகழ்வொன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பங்குபற்றியோரைப் படங்களில் காணலாம்.

வாடிக்கையாளர்களுக்கு இனிய நத்தார் வாழ்த்துக்கள்

இல: 22, யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில்

# மங்கலகரமான திறப்புவிழா

# DSI

இலங்கையின் முதல்தர பாதணி

## இரண்டாவது காட்சியறை

காலம்: 11.12.2009 வெள்ளிக்கிழமை

நேரம் பி.ப 12.30 மணியளவில்

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.




Harikanan Jaffna

# விண்டோஸ் 7 புதுமைகள்




2. விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்தியவர் மை ரீசண்ட டாகுமெண்ட்ஸ் என்னும் பிரிவை அடிக்கடி பயன்படுத்தி, அப்போதைக்குப் பயன்படுத்திய புரோகிராம்களைப் பெற்று இயக்கியிருப்பார்கள். இந்த மெனு ஸ்டார்ட் மெனுவிற்கு வலதுபக்கம் கிடைக்கப் பெறும். இதில் அப்போது பயன்படுத்திய பைல், அது டாக், பேஜ்பெக், எம்பி 3 என எதுவாக இருந்தாலும், பட்டியலிடப்படும். அதில் கிளிக் செய்து பெறலாம். இதனை விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இன்னும் விரிவாக்கியுள்ளது. மைக்ரோசொப்ட். ஒவ்வொரு அப்ளிகேஷனும் ஒரு மை ரீசண்ட் டாகு மெண்ட்ஸ் பட்டியலை ஜம்ப் லிஸ்ட் (Jump List) என்ற பெயரில் கொண்டுள்ளது. ஸ்டார்ட் மெனுவில் உள்ள புரோகிராம் அருகே ஒரு அம்புக்குறி உள்ளது. இதன் அருகே மவுஸின் கேர்சரைக் கொண்டு சென்றால், அந்த அப்ளிகேஷன் புரோகிராம் இயக்கிய தற்போதைய பைல்களின் பட்டியல் கிடைக்கிறது. மேலும் இந்த ஜம்ப் லிஸ்ட்டில் ரைட் கிளிக் செய்து, குறிப்பிட்ட பைலை பின் செய்து கொள்ளலாம். இதனால் அந்த குறிப்பிட்ட பைல் இந்தப் பட்டியலின் சுழற்சியில் மறையாது.

விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்தியவர்கள் பைல் மற்றும் போல்டர்களுக்குப் பழகி விட்டனர். விண்டோஸ் வெளியாகும்போது, மைக்ரோசாப்ட் இனைப் பயன்படுத்துபவர்கள், மைடாகுமெண்ட்ஸ் போல்டரில் தங்கள் பைல்களையும், மைபிக்சர்ஸ் போல்டரில் பட பைல்களையும் மியூசிக் பைல்களை மை மியூசிக் போல்டரிலும் மட்டுமே வைப்பார்கள் என எதிர்பார்த்தது. ஒரு வகையில் பார்த்தால் அது தர்க்க ரீதியாக சரி என்றே தெரிகிறது. அதன்படி பைல்கள் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்தால், பேக் அப் எடுக்கவும் பைல்கள் எங்கு இருக்கின்றன என்றுதேடிப் பார்க்கவும் எளிதாக இருந்திருக்கும். ஆனால் எல்லாம் நாம் திட்டமிட்டபடியாகவா நடக்கிறது! நாம் இஷ்டப்படி மை டாகுமெண்ட்ஸ் போல்டருக்கு வெளியே போல்டர்களை உருவாக்கி, நம் இஷ்டத்திற்கும் வசதிக்கும் ஏற்றபடி பைல்களைப் பாதுகாப்பாக வைக்கப் பழகிவிட்டோம். இதனால் டேட்டா அடங்கிய பைல்கள் டிரைவ்கள் எங்கும் சிதறிக்கிடக்க, பிரச்சினைகளும் குவிந்தன.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வாக விண்டோஸ் 7 லைப்ரரி என்ற ஒரு வழியைத் தந்துள்ளது. பைல்கள் சிதறிக் கிடந்தாலும், அவற்றை இந்த ஓர் இடத்தில் வைத்துத் தேடிப் பார்த்துப் பெறும் வகையில் லைப்ரேரி அமைக்கப்படுகிறது. மேலும் இந்த லைப் ரரியில் பைல்கள் அமைக்கப்படுகையில், பைல்களின் தன்மைக்கேற்ப பைல்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பட பைல்கள் தம்ப்நெயில் படங்களுடன் காட்சி அளிக்கும். மேலே சொல்லப்பட்ட மூன்று வேறுபாடுகளும் சில அடிப்படை வேறுபாடுகளே. இன்னும் பல வேறுபாடுகளை நீங்கள் பயன்படுத்துகையில் அறிந்துகொள்ளலாம். (புதுமைகள் வளரும்)




# இணைய வேகம் சரிதானா ?

புரோட்பிண்ட் இன்டர்நெட் இணைப்பு தரும்நிறுவனங்கள் பல்வேறு கட்டணங் களுடனும், விதம் விதமாய் கண்டிஷன் களுடனும் நமக்கு இணைப்புத் தருகின் றன.

மற்ற எதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும், நம்மிடம் வாங்கும் கட்டணத்திற்கேற்ற வேகத்தில் இணைப்புக் கிடைக்கிறதா என்று இன்டர் நெட் இணைப்பின் வேகத்தை நாம் கணக்கிட்டுப் பார்த்து அறிய வேண்டும்.

இதனை எந்த வழியில் அறியலாம் என்று பார்க்கலாம். உங்கள் இன்டர்நெட் இணைப்பின் வேகத்தை அறிய, முதலில் இணைப்பை இயக்குங்கள். பின் http://speedtest.net/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லுங்கள்.


அங்கு வேகத்தைச் சோதனை செய்வதற் கான தொடர்பில் கிளிக் செய்தால், உடனே உங்கள் புரோட் பின்ட் இணைப்பிற்கான ரௌட்டருக்கும் கணனிக்குமாக வேகத்தை யும் இன்டர்நெட் டவுண்லோட் ஸ்பீடையும் அது அளந்துகாட்டும்.

கீழாக உங்களுக்கு இன்டர்நெட் இணைப் புத் தரும் நிறுவனத்தின் பெயருடன், இணை ப்பின் தன்மையை நட்சத்திரக் குறியிட்டுக் காட்டும். அதிலேயே வரைபடம் ஒன்று காட்டப் பட்டு அதில் இணைய இணைப்பினை நீங்கள் பெறும் நகரம் சுட்டிக்காட்டப்படும்.

அடுத்ததாக, நீங்கள் இன்டர்நெட் இணைப்பு பெற்று சில ஆண்டுகள் கழிந் திருந்தால் உங்களிடம் முதன் முதலில் கொடுத்த புரோட்பின்ட் மொடம் தான் இருக் கும்.

இணைப்பு தரும் நிறுவனத்திடம், தற்போது அதிக வேக இணைப்பு மோடம் இருந்தல், ஒன்று உங்கள் இணைப்பிற்கென கேட்டுப் பெறவும்.

இன்டர்நெட் சேர்வீஸ் தரும் நிறுவணங்கள் அடிக்கடி தங்களின் அடிப்படை இயக்க சாதனங்களை புதுப்பித்துக்கொள்கின்றன. ஆனால்வாடிக்கையாளர்களுக்கு அது போல புதுப்பித்துத் தருவதில்லை. அதுகுறித்த தகவல்களைக் கூடத் தருவதில்லை.-



# தவழ்கிறதா விண்டோஸ்!

உங்கள் கணனி தூங்கி வழிகிறதா? பாயும் குதிரையாய் பல மாதங்களுக்கு முன் ஓடிய விண்டோஸ் இப்போது தவழ்கிறதா? ஒவ்வொரு டொகுமெண்ட்டும் எடிட் செய்து பிரிண்ட் எடுக்கும் முன் போதும்போதும் என்கிறதா?

கவலைப்படாதீர்கள். சில விடயங்களைக் கவனித்தால் போதும். வேமாக ஓடாவிட்டாலும், நமக்கு எரிச்சல் தராத வேகத்தில் விண்டோஸ் இயங்கும்.

அவற்றை இங்கு காண்போம், கணனி வேகமாகவும் அனைத்துத் திறனுடனும் இயங்கவேண்டும் என்றால், விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை மட்டும் மீண்டும் மீண்டும் ட்யூன் செய்து பயனில்லை. அதிக வேகம் தரக்கூடிய ஹார்ட்வெயர் பாகங்கள் இணைக்கப்பட வேண்டும்.

இந்தவகையில் நாம் முன்னுரிமை தரவேண்டியது ரம்மெமரி மற்றும் கிராபிக்ஸ் கார்ட் ஆகும். இவற்றை நாமே இணைப்பதாக இருந்தால், நம் உடலில் இருக்கும் ஸ்டேடிக் மின்சாரம் கணனி நுண்ணிய பாகங்களுக்குக் கடத்தாமல் இருக்கும் வகையில் அதனை வேறு உலோகங்களைத் தொடுவதன் மூலம் டிஸ்சார்ஜ் செய்திடலாம்.

ரம் மெமரி பலவகைகளில் கிடைக்கிறது. டீ.டி.ஆர் 2, டி.டி.ஆர்.3 மற்றும் பல பழைய வகைகளில் உள்ளது. தற்போது வரும் கணனிகளின் மதர்போர்ட்டுகள் குறிப்பிட்ட வகை ரம் சிப்களை மட்டுமே ஏற்றுக் கொள்ளும்.

எனவே கணனியுடன் தரப்பட்ட குறிப்பேட்டினைப் பார்த்து, எந்தவகை ரம் சிப்பினை மதர்போர்ட் ஏற்றுக்கொள்ளும் எனப் பார்க்கவும். உங்கள் மெமரியினை 4 ஜிபிக்கு மேல் உயர்த்துவதாக இருந்தால் ஒப்பரேட்டிங் சிஸ்டம் 64 பிட் சிஸ்டமாக இருக்கவேண்டும்.

விண்டோஸ் 7 ஒப்பரேட்டிங் சிஸ்டம் 64 பிட் வகையில் கிடைக்கிறது. இதனைப் பயன்படுத்தலாம். நீங்கள் கணனியை அடிக்கடி கேம்ஸ் விளையாடப் பயன்படுத்தாமல் இருந்தாலும், அதிக திறன் கொண்ட கிராபிக்ஸ் கார்ட் ஒன்றை கணனியில் நிறுவுவது நல்லது. குறிப்பாக விண்டோஸ் 7 மற்றும் விஸ்டா அவற்றின் யூசர் இன்டர் பேஸ் திரைகளின் காட்சித் தோற்றங்களைச் சிறப்பாக அமைத்திருப்பதால், கிராபிக்ஸ் கார்ட் அதிக திறனுடன் இருப்பது இவற்றின் பயனை நன்கு நமக்கு தரும்.


உங்கள் ஒப்பரேட்டிங் சிஸ்டம் விண்டோஸ் எக்ஸ்பி, விண்டோஸ் விஸ்டா அல்லது விண்டோஸ் 7 என எதுவாக இருந்தாலும், இதனை ஒட்டிக்கொள்ளும் தேவையற்றவைகளை, அவ்வப்போது நீக்குவது, இவற்றின் வேகமான செயல்பாட்டை உறுதி செய்திடும்.

தேவையற்ற செயல்பாடுகள், செயல்படுத்தாத ஸ்டார்ட் அப் புரோகிராம்களை நீக்க வேண்டும். இதனால் விண்டோஸ் தன் சக்தியை இவற்றில் ஈடுபடுத்தாமல், தேவைப்படும் புரோகிராம்களில் மட்டுமே பயன்படுத்த வழி கிடைக்கும். விண்டோஸ் எக்ஸ்பியில், சிஸ்டம் கண்ட்ரோல் பனலைத் திறந்திடவும்.

அதில் அட்வான்ஸ்ட் (Advanced) டேப்பில் கிளிக் செய்திடவும். பின் செட்டிங்ஸ் (Settings) என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இதில் அட்ஜஸ்ட் பார் பெஸ்ட் பெர்போர்மன்ஸ் என்ற ரேடியோ பட்டனைக் கிளிக் செய்திடவும்.

இதனால் மெனுவின் கீழாக ட்ராப் ஷேடோ போன்ற அலங்கார வேலைப்பாடுகள் நீக்கப்படும்.

விஸ்டாவில் சைட்பார் செயல் இழக்கச் செய்வதன்மூலம், இந்த செயல்பாட்டினை மேற்கொள்ளலாம். விண்டோஸ் விஸ்டா மற்றும் விண்டோஸ் 7 சிஸ்டங்களில் ஏரோ (Aero) சூழ்நிலையை நிறுத்துவதன் மூலம், கணனி மெமரியையும், செயல்திறன் சக்தியையும் (Processing Power) மேம்படுத்தலாம். இதற்கு டெஸ்க்டொப்பில் ரைட் கிளிக் செய்து, கொண்டெக்ஸ்ட் மெனுவில் பெர்சனலைஸ் (Personalize) என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.




விஸ்டாவில் விண்டோ கலர் அண்ட் அப்பியரன்ஸ் (Window color and appear ance) என்பதை கிளிக் செய்து அதில் எனேபில் ட்ரான்ஸ்பரன்ஸி (Enable Transparency) என்பதில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்து விடவும். விண்டோஸ் 7 சிஸ்டத்தில் விண்டோஸ் 7 பேசிக் (Windows 7 Basic) என்ற தீமைத் தேர்ந்தெடுக்கவும்.

நாம் அடிக்கடி இணையத்தில் பார்க்கும் பல புரோகிராம்களை கணனி இன்ஸ்டோல் செய்துவிடுகிறோம். இவற்றை இன்ஸ்டோல் செய்கையில், சிஸ்டம் தொடங்கும்போதே, அவற்றைத் தொடங்கும் வகையிலும் அமைத்து விடுகிறோம். இதனால் நமக்குத்தேவையான, அன்றாடம் பயன்படுத்தப்படுகின்ற (எம்.எஸ். ஒபீஸ், பேஜ்மேக்கர், போட்டோ ஷொப் போல) புரோகிராம்களின் இயக்க வேகம் பாதிக்கப்படுகின்றது. முதலில் சொல்லப்பட்ட பயன்படுத்தாத பல புரோகிராம்கள், இவற்றின் பின்னணியில் இயங்குவதே இதற்குக் காரணம்.

விண்டோஸ் 7 மற்றும் விஸ்டாவில், ஸ்டார்ட் கிளிக் செய்து சேர்ச் புரோகிராம்ஸ் அண்ட் பைல்ஸ் (Search Programs and Files) என்ற பீல்டிங் msconfig என டைப் செய்து என்டர் தட்டவும்.

சிஸ்டம் கான்பிகரேஷன் (System Configuration) விண்டோ இப்போது கிடைக்கும். இவற்றில் உள்ள டேப்களில் Startup என்ற டேப்பில் கிளிக்செய்திடவும். இனி கட்டளை (Command) பிரிவில் உங்களுக்குத் தேவைப்படாத புரோகிராம் உள்ளதா எனப் பார்க்கவும். எடுத்துக் காட்டாக, ஐ ட்யூன்ஸ்(iTunes) வந்த காலத்தில் அதனைப் பதிந்திருக்கலாம். இதனால் iTuneshelper.exe மற்றும் QTTask.exe என்ற இருபைல்கள் இயங்கியவாறு இருக்கும்.

இவற்றினால் எந்தப் பயனும் தனியாக இல்லை. இதுபோன்ற தேவையற்ற புரோகிராம்கள் ஸ்டார்ட் அப்பில் இயக்கப்படுவதைத் தடுக்கலாம். இதனால் ரம் மெமரி இடம் காலியாகி, அவசியமான புரோகிராம்கள் வேகமாக இயங்க வழிகிடைக்கும்.

(தகவல்கள் வளரும்)

# தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க மத்திய அரசு சம்மதம்

## உண்ணாவிரதத்தை கைவிட்டார் சந்திரசேகரராவ்



(புதுடில்லி)

தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கப் பட வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதன்முதல் கட்ட நடவடிக்கையாக தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி ஆந்திர சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுவது என காங்கிரஸ் மேலிடம் முடிவு செய் துள்ளது.

இத் தகவலை மத்திய உள்துறை அமைச் சர் ப.சிதம் பரம் தெரிவித்தார். டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் இல்லத்தில் புதன் கிழமை இரவு நடந்த நீண்ட ஆலோ சனைக்குப் பிறகு அவர் செய்தியாளர்களுக்குப் பேட் டியளித்தார். அப்போது இதைத் தெரிவித்தார். இரண்டு சுற்றுகளாக நடந்த ஆலோ சனையில் காங் கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன்சிங், மூத்த அமைச்சர்கள் மற்றும் ஆந்திர முதல்வர் ரோசய்யா ஆகியோர் பங்கேற்றனர்.

ஆந்திரத்தில் பற்றி எரியும் தெலுங்கானா நெருப்பை அணைக்கும் முயற்சியாக காங்கிரஸ் மேலிடம் இந்த முடிவை எடுத் துள்ளதாகத் தெரிகிறது. தனி மாநிலம் அமைப்பதற்கான முதல் கட்ட நடவடிக் கை தொடங்கப்பட்டுள்ளது. இது தொ டர்பாக முறையான தீர்மானம் சட்டப் பேரவையில் நிறை வேற்றப்படும் என்று அவர் கூறினார்.

சட்டப்பேரவையில் தீர்மானம் எப்போது நிறைவேற்றப்படும் என்ற விபரத்தை அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

உண்ணாவிரதம் இருந்துவரும் சந்திர சேகரராவின் உடல் நலனில் மத்திய அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. அவர் போராட்டத்தை உடனடியாக கைவிட வேண் டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். தெலுங் கானா போராட்டம் தொடர்பாக மாணவர்கள் மற்றும் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சி யினர் மீது பதிவுசெய்யப்பட்ட வழக்குகள் அனைத்தையும் வாபஸ் பெறுமாறு மாநில முதல்வர் ரோசய்யாவிடம் அறிவுறுத்தப்பட் டுள்ளதாக சிதம்பரம் தெரிவித்தார்.

மாணவர்களும் போராட்டத்தை உடனடி யாக கைவிடவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். தெலுங்கானா பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று கோரி மாநிலங்கள வையில் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கடும் அமளி ஏற்பட்டு அவை ஒத்தி வைக்கப்பட்டது. சந்திரசேகரரா வுக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கு மத்திய அரசே பொறுப்பு என்று பா.ஜ.க. குற்றம் சாட்டியது.

தெலுங்கானா பகுதி எம்.பிக்கள்., காங் கிரஸ் மூத்த தலைவர்கள் ஆகியோரும் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து நிலைமை யின் தீவிரவாதத்தை எடுத்துக் கூறினார். தெலுங்கானா போராட்டம் ஆந்திரத்தில் சட்டம்,ஒழுங்கு பிரச்சினையாக மாறி உள் ளது.

எனவே உடனடியாகத் தீர்வுகாணவேண் டும் என்று அவர்கள் கேட்டுக் கெண்டனர். சந்திரசேகரராவின் உடல்நிலை குறித்து அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார் பிரதமர். மத்திய அரசின் முடிவை அடுத்து தெலுங் கானா தனி மாநிலம் தொடர்பான அனைத் துப் போரட்டங்களும் கைவிடப்படும் என்று தெரிகிறது. மத்திய அரசின் அறிவிப்பை அடுத்து கடந்த 11 நாட்களாக மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டத்தை சந்திர சேகர ராவ் புதன்கிழமை நள்ளிரவு கைவிட்டார். இதையடுத்து கடந்த 11 நாட்களாக ஆந்தி ரத்தை உலுக்கிய போராட்டமும் முடிவுக்கு வந்துள்ளது. (6)

# தெலுங்கானாவை எதிர்த்து 60 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா

## ஆந்திராவில் அடுத்த குழப்பம் ஆரம்பம்

தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க மத்திய அரசு சம்மதம் தெரிவித்ததற்கு எதிர்ப்புக்கிளம்பியுள்ளது. காங்கிரஸ் எம்.பி. லகடபதி ராஜகோபால் ராஜினாமா செய்துள் ளார். ஆந்திரமாநில எம்.எல்.ஏ.க்கள் பலரும் ராஜினாம் செய்துள்ளனர். ராயல்சீமா, கட லோர ஆந்திராபகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பிக்களும், எம்.எல்.ஏக்களும் தெலுங் கானா மாநிலம் அமைக்கக்கூடாது என போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இவர்களுடன் தெலுங்குதேச கட்சி எம்.எல்.ஏ.க்களும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

விஜயவாடா லோக்சபா தொகுதி காங்கிரஸ் எம்.பி லகடபதி ராஜகோபால் ராஜினாமா கடிதம் கொடுத்துள்ளார். சபாநாயகர் மீரா குமாரை சந்தித்து அவர் ராஜினாமா கடிதத்தை கொடுத்துள்ளார். அதன் பின்னர் டில்லியி ருந்து அவர் ஹைதராபாத் கிளம்பிச் சென்று விட்டார். ஒருங்கிணைந்த ஆந்திராவை காக்க தான் தீவிரமாகப் போராடப்போவதாகவும் அவர்கூறியுள்ளார். மேலும் 5 காங்கிரஸ் எம்.பி.க்களும் ராஜினாமா செய்யலாம் என வெளியாகியுள்ள தகவல்களால் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

தெலுங்கு தேசம்கட்சி மற்றும் ஆந்திர மாநில காங்கிரஸ்கட்சியைச்சேர்ந்த எம்.எல். ஏ.க்கள் 60 பேரும் பதவி விலகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் ஆந்திராவில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதேபோல் தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆந்திராவின் பிறபகுதிகளில் போராட்டங்கள் வெடித்துள்ளது. இதனால் ஆந்திர அரசுக்கும், மத்திய அரசுக்கும் பெரும் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. (ஓ-6)




# இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக மேலும் ஒரு வழக்கு

## வைகோ கைதாவாரா?

ஈழத்தமிழர்களின் பிரச்சினை தொடர் பாக அண்மையில் மதிமுக பொதுச் செய லாளர் வைகோ தெரிவித்ததாக கூறப்படும் ஆட்சேபகரமான கருத்தால் அவர் மீது இந்திய இறையாண்மைக்கு எதிராகப்பேசியதாக மேலும் ஒருவழக்கு தொடரப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் கைது செய்யப்படக்கூடும் என்று காவல்துறை தகவல்கள் தெரிவிக் கின்றன.

ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் இந்திய அரசின் தவறுகளை சுட்டிக்காட்டி மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பிரதமர் மன் மோகன்சிங்கிற்கு பலமுறை கடிதங்கள் எழுதியிருந்தார். இந்தக் கடிதங்கள் அனைத் தும் ஒன்றாக தொகுக்கப்பட்டு குற்றம்சாட்டு கிறேன் என்ற தலைப்பில் நூலாக வெளி யிடப்பட்டது. ராணி சீதை மன்றத்தில் கடந்த ஜூலை மாதம் 15 ஆம்திகதி இந்த நூல் வெளியீட்டு விழா நடை பெற்றது.



இந்த விழாவில் பேசிய வைகோ, இந்திய அரசுக்கு எதிராகவும், நாட்டின் இறை யாண்மைக்கு எதிராகவும் சில கருத்துக்களை தெரி வித்ததாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அவர் மீது இந்திய இறை யாண்மைக்கு எதிராகப் பேசியதாக ஆயிரம் விளக்கு பொலிஸ்நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் மோகன் இதுகுறித்து விசாரணை நடத்தி வருகிறார். இந்த வழக்கிலும் வைகோ எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்று பொலிஸ் வட்டாரத் தகவல்கள்தெரிவிக்கின்றன. இடைத்தேர்தல் நேரத்தில் வைகோ கைது செய்யப்படலாம் என்று வெளியாகி உள்ள தகவல்கள் அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ஓ-6)

# கட்டடத்தின் மீது ஹெலிகொப்டர் மோதியது

## ஜனாதிபதி பிரதீபா பட்டீல் உயிர் தப்பினார்

(புவனேஸ்வரம்)

ஜனாதிபதி பிரதீபா பட்டீல் பயணம் செய்த ஹெலிகொப்டர், ஒரிசா மாநிலத்தில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானது. அந்த விபத்தில் அவரும், அவருடைய கணவர் தேவிசிங் மற்றும் ஒரிசா ஆளுநர் பண்டாரி ஆகியோர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

ஒரிசா மாநிலத்தில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் நேற்று முன்தினம் பயணம் மேற் கொண்டார். பூரி நகரில் நடைபெற்ற ஒரு விழா வில் அவர் பங்கேற்றார். அந்த விழா முடிந் ததும் தலைநகர் புவனேஸ்வரத்துக்கு ஹெலி கொப்டரில் புறப்பட்டார்.

இந்திய விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டரில் அவருடன் அவரது கண வர் தேவிசிங் செகாவத், ஒரிசா மாநில ஆளு நர் எம்.சி. பண்டாரி ஆகியோரும் இருந் தனர்.

16 இருக்கைகள் கொண்ட அந்த ஹெலி கொப்டர், புவனேஸ்வரத்தில் உள்ள பிஜு பட்நாயக் விமான நிலையத்தில் தரை இறங் கும் போது எதிர்பாராத விதமாக விபத்துக் குள்ளானது.

விமான நிலையத்தில் தரை இறங்கிய தும், பயணிகள் இறங்குவதற்காக அமைக் கப்பட்டுள்ள இடத்துக்கு அந்த ஹெலிகொப்டர் கொண்டு செல்லப்பட்டது. அப்போது, விமான நிலையத்துக்குள்ளேயே பயனற்ற நிலை யில் இருக்கும் ஒரு கட்டடத்தின் மேல் பகுதியில் ஹெலிகொப்டரின் பிளேடுகள் உரசின.

அந்தக் கட்டடத்தின் மேற்பகுதியில் வேயப் பட்டு இருந்த ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மீது



அந்த பிளேடுகள் கடுமையாக மோதின. அதனால், ஆஸ்பெஸ்டாஸ் கூரை முற்றிலு மாக பிய்த்து எறியப்பட்டது. மேலும், ஹெலி கொப்டரின் மேலே சுற்றிக்கொண்டிருந்த மூன்று பிளேடுகளும் வளைந்தன. அதனால், விமான நிலைய அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

எனினும், வேறு எந்தவிதக் கோளாறும் ஹெலிகொப்டரில் ஏற்படவில்லை. பிரதீபா அவரது கணவர் தேவிசிங் மற்றும் ஒரிசா கவர்னர் பண்டாரி உட்பட ஹெலிகொப்டரில் இருந்த அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இந்த ஆண்டில் ஜனாதிபதி பிரதீபாவின் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாவது இரண் டாவது முறையாகும்.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி அன்று மும்பை விமான நிலையத் தில் அவருடைய ஹெலி கொப்டர் தரை யிறங்கும் சமயத்தில் ஏர் இந்தியா விமானம் புறப்படு வதற்கு அனுமதியளிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ஓ-6)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# ஒளிப்படவியல் (Photography)

ஒளிப்படவியல் என்பது ஒளிப்படத் தகடு அல்லது மின்னணு உணரி (electronic sensor) போன்ற ஒளியுணர் ஊடகத்தின் மீது ஒளியை விழச்செய்து நிலையான மற்றும் அசையும் தோற்றங்களை பதிவு செய்யும் வழிமுறையைக் குறிக்கும். ஒரு பொருளினால் தெறிக்கப்படும் அல்லது அதிலிருந்து வெளிவிடப்படும் ஒளியானது ஒளிப்படவியல் வில்லையினூடாக சென்று ஒளி உணர்திறன் கொண்ட இரசாயனப் பொருள் அல்லது மின்னணு உணரியைபடும்போது அப்பொருட் தோற்றம் குறித்த தகவல் சேமிக்கப படுகின்றது. இது ஒளிப்படக்கருவி (Camera) மூலம் நிகழ்ததப்படுகின்றது.

பெரும்பாலானோர் ஒளிப்படவியலானது ஒரு எளிதான முறையென நினைக கிறார்கள். நீங்கள் நினைப்பது போன்று படச்சுருளை கமராவினுள் செலுத்தி குறித்த படத்தை எடுப்பதுடன் சரியா?.. வெளியிலிருந்து பார்க்கும் போது புகைப்படம் எடுத்தலானது ஒரு சுலபமான காரியமாக தெரிந்தாலும் கமராவினுள்ளும் படம் கழுவும் கூடத்திலும் மிகச் சிக்கலான இரசாயன செயன்முறைகளை கொண்டதாக இருக்கின்றது.


இச் செயன் முறையை மேலும் கற்றுக்கொள்வதன் மூலம் புகைப்படம் எடுத்தலானது எவ்வளவு விசேடமான செயன் முறை என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

ஒளிப்படச்சுருளானது (photographic film) வேறுபட்ட அளவுகளையுடைய பளிங்குருவில் அமைந்த ஒளிக்கு உணர்திறனுடைய வெள்ளிஏலைட்டு (silver halide)



பாகுத் தன்மையான திரவத்தின் இலத்திரன் நுணுக்கு வரைபடம்

உட்கைக்கொண்ட (gelatin இனால் பிணைக கப்பட்ட) பாகுத்தன்மையான திரவமானது (emulsion) பிளாஸ்ரிக் விரிப்பினால் (பொலியெஸ்ரர், செலுலோயிட், செலுலோஸ் அசறேற்று) போர்க்கப்பட்ட அமைப்பைக் குறிக்கிறது.




மேலுள்ள வரைபடங்களானது நெகடிவ் ஒளியுணர் பகுதியிலுள்ள (negative film) பாகுத்தன்மையான திரவப் படையின் (emulsion layer) குறுக்குவெட்டு முகத்தைக் காட்டுகின்றது. இதில் அமிழ்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ள சிறிய உருவங்கள் பளிங்குருவான வெள்ளி ஏலைட்டு (AgX) துணிக்கைகளைக் குறிக்கின்றது.


ஒளிப்படவியல் தாக்கம் நிகழ்வதற்கு முன்னருள்ள ஒளியுணர் பகுதியின் அமைப்பை படம் A காட்டுகின்றது.

படம் B – புகைப்படம் எடுக்கும் போது ஒளிப்படக்கருவியின் மூடி (Shutter) திறப்பதன் மூலம் ஒளியுணர் பகுதியானது (Film) ஒளிக்கு வெளிக்காட்டப்படுகிறது. இதன் போது சில ஒளிக்கதிர்கள் வெள்ளி ஏலைட்டு துணிக்கைகளை/ பளிங்குகளை ஊடுருவுவதன் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கத்தின் போது அத் துணிக்கையின் மேற்பரப்பில் சிறிய புள்ளி உருவான வெள்ளி உருவாகின்றது. இவையே படஉருவாக்கத்துக்கான பகுதியாக (development site) காணப்படுகின்றது. அதே சமயத்தில் சில ஒளிக்கதிர்கள் எந்தவொரு பளிங்குகளிலும் மோதாமல் ஒளியுணர்பகுதியினூடாக பிரயாணிக்கிறது. எந்தவொரு பளிங்கும் ஒளியினால் தாக்கப்படாவிடில், anti-halation backing செயன்முறையானது ஒளிக் கதிர்கள் ஒளியுணர்பகுதியின் அடித்தளத்திலிருந்து தெறிப்படையாமல் தடுக்கிறது. ஒளிக்கதிருக்கும் பளிங்குருவான துணிக்கைகளுக்குமிடையிலான இடைத்தாக்கமே ஒளிப்படவியலில் முக்கிய அம்சமாக இருக்கிறது.

$Ag^+Br^-$ (பளிங்கு) + ஒளிக்கதிர் (radiation) $\longrightarrow Ag^+ + Br +$ இலத்திரன்


$Ag^+ +$ இலத்திரன் $\longrightarrow Ag$

பளிங்குருவான கட்டமைப்பையுடைய துணிக்கையில் வெள்ளி அணுவானது நேர் ஏற்றத்தையும் அலசன் (eg.Br) அணுவானது எதிர் ஏற்றத்தையும் கொண்டதாக காணப்படுகின்றது. இருப்பினும் இந்த வெள்ளிஅலசன் பளிங்கு கட்டமைப்பானது முழுமையில்லாத உணர்ச்சியுள்ள சிறிய புள்ளிகளை (Sensitivity specks) கொண்டுள்ளது. ஒளிக்கதிரானது துணிக்கையிலுள்ள ஏதாவதொரு அலசன் அணுவுடன் தொடுகையுறும் போது அது இலத்திரனால் அருட்டப்படுவதுடன் பளிங்குருவான கட்டமைப்பின் இன்னொரு இடத்திற்கு அசையக்கூடியதாகவும் இருக்கிறது. இதுவே உணர்ச்சியுள்ள புள்ளிக்கு (Sensitivity specks) போகக்கூடியதாக இருக்கும்.




அதிகமான ஒளிக்கதிரானது அலசன் அணுக்களை தாக்கும் போது வெள்ளி அணுவானது உணர்வூட்டும் புள்ளிகளின் மேல் அதிகளவில் உருவாக்கப்படுகின்றது. வெள்ளி அணுவானது மேலதிகமாக ஒரு இலத்திரனைப் பெறுகிறது. அவ்வண்ணம் தற்பொழுது வெள்ளி உலோகமாக (metallic silver) மாறுகிறது. இவ்வாறான சிறுவெள்ளி உலோக கூட்டங்கள் (development sites), இந்தக்கட்டத்தில் அறியக்கூடிய/ புலப்படக்கூடிய நிலையில் இருப்பதில்லை. ஆனால் அவை கண்ணுக்கு புலப்படாத தோற்றத்தை (Latent image) உருவாக்குகிறது..

படம் D ஆனது படஉருவாக்கத்துக்கான (development) படிமுறையை காட்டுகிறது. பட உருவாக்கசெயன்முறை ஆனது இது வரை விபரிக்கப்பட்ட இரசாயன மாற்றங்களை வெற்றுக் கண்ணால் பார்க்கக் கூடிய தோற்றமாக மாற்றுகிறது. இச் செயன்முறையின் போது ஒரு தாழ்த்தும் கருவியே (reducing agent) அடிப்படை இரசாயனப் பொருளாக ஈடுபடுத்தப்படுகின்றது. Hydroquinone, metol மற்றும் phenidone என்பவையே மிக பொதுவாக பாவிக்கப்படும் இரசாயன தாழ்த்திகளாகும். இத் தாழ்த்தியானது வெள்ளி அயனை வெள்ளி அணுவாக தாழ்த்துகிறது. (தாழ்ததியானது நேர் ஏற்றமுள்ள வெள்ளி அயனுக்கு இலத்திரனை வழங்குகிறது)




ஒரு துணிக்கையில் அதிகளவிலான எண்ணிக்கையில் வெள்ளி அணுக்கரு காணப்படும் போது படஉருவாக்கத்தை விரைவுபடுத்துவதுடன் மீதமாகவுள்ள வெளளியை வெள்ளி உலோகமாக தாழ்த்துகிறது. இவ்வாறு அதிகளவு ஒளியினால் தாக்கப்படும் துணிக்கைகள் மிக விரைவாக தாழ்த்தப்படுவதுடன் உருவாக்கப்பட்ட வெள்ளியின் மூலம் மிகக் கடுமையான நிறத்தை உடையதாகிறது.

இங்கு பயன்படுத்தப்படும் தாழ்த்தியானது பொருத்தமானதாகவும் துணிக்கைகளின் ஒளிக்கு துலங்காத பகுதிகளை தாழ்த்தும் தன்மையற்றதாகவும் இருப்பது மிக முக்கியம். இல்லாவிடில் படம் புகைமயமாக (foggy) இருக்கும். இறுதியாக, ஒளியுணர் பகுதியிலுள்ள எல்லா வெள்ளி அணுக்களும், அது கண்ணுக்கு புலப்படாத தோற்றத்தின் (latent image) ஒரு பகுதியாகவோ அல்லது வேறு பகுதியிலோ இருந்தாலும் அவை தாழ்த்தப்படும்; படவுருவாக்க செயன்முறையானது சரியாக நேரம் கணிப்பிடப்பட்டு நிறுததப்பட வேண்டும். அப்போதுதான் நீண்ட காலத்துக்கு நிலைக்கக்கூடிய தரமான புகைப்படங்களை பெற்றுக்கொள்ளமுடியும். இங்கே வேறு பல பகுதிகளும் ஒரு நல்ல வினைதிறனான படவுருவாக்க கரைசலில் காணப்படுகிறது.

(நாளை தொடரும்)



Miss. Vanathy Easwarathasan

## வாரத்திற்கு ஒரு புதிர்! 10

சுறாக்களின் ஈரலிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெயில் காணப்படுகின்ற அழகுசாதனங்கள், மருந்துகள், வர்ணங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் முக்கியமான இரசாயனப் பதார்த்தம் எது?

விடைகளை 23.12.2009 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி

Mr. V. Senthil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட, பௌதிகவியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர் :
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழக கிளை.

**புதிர் 8 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திரு.கே. இராஜகோபால்
அடைக்கலந்தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 9 இற்கான விடை :** Cacharodon carcharias
Galeocerdo cuvier
Carcharhinus leucas
இவற்றுள் எவையேனும் இரண்டு

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 10

| | |
|---|---|
| சரியான விடை | ………………………………… |
| முழுப்பெயர் | ………………………………… |
| முகவரி | ………………………………… |
| | ………………………………… |
| கையொப்பம் | ………………………………… |

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

### காளமேகம்

எண்ணியவுடன் அதேநேரத்தில் கவி பாடுகிறவர்களை ஆசுகவி எனச் சொல்வது உண்டு. தமிழிலக்கியத்தில் ஆசுகவிகள் மிகுதியாகப் பாடிப் புகழ்பெற்றவர் காளமேகப் புலவர் என்பவர். அவர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். காளமேகம் எதிர்பாராமல் பெருமழை பெய்து திகைக்க வைப்பது போல், நாட்டில் பல நிகழ்ச்சிகளின்போது ஆசுகவிகள் பல பாடி வியப்பூட்டிய காரணத்தால் அவர் காளமேகம் எனப் பெயர் பெற்றார். அவருடைய இயற்பெயர் காலப்போக்கில் மறக்கப்பட்டது.

அவருடைய பாடல்களில் பல, கேட்பவர்க்கு எளிதில் பொருள் விளங்கக் கூடியவை. ஆற்றலான உணர்ச்சிகளைப் புலப்படுத்துபவை. சிலேடை அமைந்த கவி களும் சில உண்டு. புலவர்களை மதியாமல் செருக்குடன் இருந்த சிலரின் செருக்கு அடக்கும் வகையில் அவர்களைப் பழித்துப் பாடிய பாடல்களும் உண்டு.

அவர் பழைய இலக்கிய மரபை ஒட்டியும் நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் திருவானைக்காவுலா என்பதும் சித்திரமடல் என்பதும் அழியாப் புகழ் உடையவை. முன்னது, பலர் சூழப் பெருமையுடன் தலைவன் உலா வருவதை வருணிக்கும் முறையில் அமைந்த நூல் வகை. பின்னது, காதலில் ஏமாற்றம் உற்றவர் தம்மை வருந்திக்கொள்வதாகப் பாடும் மடல் வகையைச் சார்ந்தது. ஆயினும் அவர் தம் தனிப் பாடல்களாலேயே மக்களின் நெஞ்சில் வாழ்ந்து வருகிறார்.

காளமேகப் புலவர் ஓர் ஊருக்குச் சென்றபோது சத்திரத்தில் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவருக்கு அப்போது பசி, உணவுக்கு நேரம் ஆயிற்று. சமையல் ஆகிக்கொண்டிருப்பதாகத் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. கடைசியாக ஆட்கள் வந்து இலை இட்டுப் பரிமாறியபோது, காலம்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

தாழ்த்தி அவர்கள் உணவு பரிமாறியதைப் பற்றி நகைச்சுவையோடு பாடினார். "இந்தச் சத்திரத்தில் உணவு சமைப்பவர்களுக்குப் பொழுது அஸ்தமிக்கும் போது அரிசி வந்து சேரும். அதைக் குத்தி உலையில் இடும்போது, ஊர் அமைதியாக உறங்கிவிடும். சமைத்த சோற்றை அகப்பையால் எடுத்து இலையில் பரிமாறும்போது பொழுது விடியத் தொடங்கி கிழக்கே வெள்ளி முளைக்கும்" என்று பாடினார்.

*கத்துகடல் சூழ்நாகைக்காத்தான்தன் சத்திரத்தில்*
*அத்தமிக்கும் போதில் அரிசிவரும் -குத்தி*
*உல்லையில் இட ஊர் அடங்கும் அகப்பை அன்னம்*
*இலையில்இட வெள்ளி எழும்.*

மோர் விற்பவள் ஒருமுறை அவருக்கு மோர் விற்றபோது, அந்த மோரில் நீர் மிகுதியாகக் கலந்திருப்பதைக் கண்டார். உடனே நகைச்சுவையோடு ஒரு பாடல் பாடினார். " நீ வானத்தில் இருக்கும்போது மேகம் என்று பெயர் பெறுகிறாய். நிலத்திற்கு வந்த பிறகு நீர் என்று பெயர் பெறுகிறாய். இந்த மங்கையின் கையை அடையும்போது மோர் என்ற பெயர் உனக்கு அமைகிறது. எத்தனை பெயர்களை நீ பெறுகிறாய்!'' என்றார். சில தெய்வங்களைப் பற்றியும் அவர் எள்ளி நகையாடுவது போல் சுவையாகப் பாடியுள்ளார்.

### இரட்டைப்புலவர்

புலவர் இருவர் தம் உடற் குறை காரண மாக ஒன்றுபட்டு இலக்கிய வாழ்க்கை நடத்திய விந்தையான வரலாறு தமிழிலக்கியத்தில் உள்ளது. ஒரு வர் அத்தை மகன்; மற்றவர் அவர்க்கு அம்மான் மகன். ஒருவர் குருடர் ; மற்றவர் முடவர்.

முடவரால் நடக்க முடியாது; ஆனால் வழிகாட்ட முடிந்தது; குருடர் வழி காண முடியாது ; ஆனால் முட்வர் காட்டிய வழியில் நடந்துசெல்ல முடிந்தது. குருடரின் தோளில் முடவர் அமர்ந்து செல்வது வழக்கம் ஆயிற்று; ஒருவரின் துணை மற்றவர்க்குக் கிடைக்க இருவரும் சேர்ந்து ஒருவகைக் கூட்டு வாழ்க்கை நடத்த முடிந்தது. இருவர்க்கும் அமைந்திருந்த புலமைச் சிறப்பு அந்தக் குறையான வாழ்க்கைக்கு ஒளி தந்தது. இளஞ்சூரியர் , முதுசூரியர் என்ற பெயரால் அவர்கள் தனித்தனியே அழைக்கப்பட்டனர். பிறப்பாலும் உடற்குறையாலும் ஏற்பட்ட உறவை , இருவருடைய புலமைத்திறமும் உறுதிப் படுத்தின.

நான்கு அடிகள் கொண்ட வெண்பாவில் , ஒருவர் முன் இரண்டு அடிபாட ,மற்றவர் அதே உணர்ச்சியுடனும் அதே கற்பனை யாற்றலுடனும் பின் இரண்டு அடிபாடி முடித்து வந்தனர். புலமையை மதியாத செல்வர்களைத் தாழ்வுறச் செய்து பாடிய பாடல்கள் அவர்களின் மான உணர்ச்சியைக் காட்டுகின்றன. நல்ல பண்பு உடைய செல்வர்களை அவர்கள் புகழ்ந்து பாடிய பாடல்கள் அவர்களின் நல்ல மனத்தின் நன்றியுணர்ச்சியைப் புலப்படுத்துகின்றன. சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்ப அவர்கள் பாடிய தனிப்பாடல்கள் பல. நகைச் சுவை ததும்பும் பாடல்களும் உள்ளன. எள்ளி நகையாடும் பாடல்கள் தனிச் சுவை யோடு அமைந்துள்ளன.

75

கலம்பகம் என்னும் நூல்வகை (பல வகைப் பொருள்களும் பலவகைச் செய்யுளில் அமைய நூறு பாடல்கள் கொண்ட இலக்கியம்) பாடுவதில் புகழ்பெற்றவர்கள் இரட்டையர். திருவாமாத்தூர்க் கலம்பகமும், தில்லைக் கலம்பகமும் இவர்கள் இயற்றியவை. உலா வகையில் இவர்களின் ஏகாம்பரநாதருலா புகழ் உடையது.

**பேராசிரியர் மு.வரதராசன்**

### அந்தகக்கவி

பிறவியிலேயே கண் பார்வை இல்லாமல் இருந்தும், புலமை நிரம்பியவராய் இலக்கியத் தொண்டு புரிந்தவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்பார். இவர் இசையிலும் பயிற்சி உள்ளவர்.

சிறந்த கவிஞராகவும் விளங்கியவர். இவர் இயற்றிய பாடல்கள் சொற்சுவையும் பொருள் நயமும் உடையவை. இவர் இலங் கைக்கும் சென்று அங்கே அரசாண்டு வந்த பரராசசிங்கனைத் தம்பாடல்களால் மகிழச் செய்து சிறந்த பரிசுகள் பெற்றார். (தொடரும்)

---

## சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களாக படை அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

ஆளும் கூட்டணியின் பிரதான அரசியல் கட்சியான சுதந்திர கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களாக பல மூத்த இராணுவ அதிகாரிகளை நியமிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களாக இராணுவ உயர் அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் தேர்தலில் படையினரின் குடும்பங்களின் வாக்குகளை அதிகம் கவர்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தளை மாவட்டத்தின் அமைப்பாளராக இராணுவ நடவடிக்கை பணியக பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சவீந்தர் சில்வா, அனுராதபுரம் மாவட்ட அமைப்பாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராட்சி, காலி மாவட்ட அமைப்பாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சனத் கருணாரட்னா, குருநாகல் மாவட்ட அமைப்பாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

## கொழும்பில் வர்த்தகர் கடத்தலின் பின்னணியில் அமைச்சர் மேர்வின்

(கொழும்பு)

கொழும்பு 8, பொரளையில் கடந்த வாரம் வர்த்தகர், பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட்ட நான்கு பேர் கடத்திச் செல்லப்பட்டமையின் பின்னணியில் அமைச்சர் மேர்வின் சில்வா இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வத்தளையைச். சேர்ந்த வர்த்தகரான ரட்நாயக்க என்பவர் மேர்வின் சில்வாவின் சகாவான "குடுலால்" என்ற பாதாள உலக தலைவருக்கு கொடுக்க வேண்டிய கப்பத்தை கொடுக்காததன் காரணமாகவே கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த கடத்தல் சம்பவத்தில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டமையை அடுத்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ஓ-6)

## எஸ்.பி.பிரதமராக நியமிக்கப்பட்டால் அதனை எதிர்க்கப் போவதில்லை

### அமைச்சர் டி.எம்.ஜயரட்ன

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்கவை ஜனாதிபதி பிரதமர் பதவிக்கு நியமித்தால் அதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என பெருந்தோட்ட அமைச்சர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எஸ்.பி. திஸநாயக்கவை பிரதமராகத் தெரிவு செய்யக் கூடுமென கடந்த சில தினங்களாக செய்திகள் வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கட்சிக்குள் பிரதமர் பதவியை வகிப்பதற்கான சலக தகுதிகளும் தமக்குக் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு ஒருபோதும் குறுக்கீடு செய்யும் எண்ணம் தமக்குக் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் பிரதமர் பதவியை வகிகக் கூடிய தகுதியுடைய இன்னும் சிலர் இருப்பதாகவும், கடந்த காலங்களைப் போன்றே ஜனாதிபதியின் உத்தரவுகளுக்கு தொடர்ச்சியாக கட்டுப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)



நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 21 ஆவது வருட தொடக்க ஸ்தாபக தினம் (Charler Day) அண்மையில் IIS கம்பஸ் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 306 B1 உப ஆளுநர் லயன் ஜெயவர்த்சலம் கழக ஸ்தாபன உறுப்பினர் லயன் வல்லிபுரம் பரமசிவத்தின் 20 வருடசேவையைக் கௌரவித்து அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# மகாகவி பாரதியாரும் கவிதைச் சிந்தனைகளும்



பாரதி தமிழுக்கும் தமிழ்க்கவிதைக்கும் கிடைத்த ஒரு கொடை. 1882 ஆம் ஆண்டு மார்கழி 11 ஆம் திகதி பாரதி பிறந்தான். "பாரதி" என்ற பெயர் தமிழ்க்கவிதை மரபில் ஒரு மந்திரம். அவனை உச்சரிக்காமல் நாம் தமிழ்க்கவிதையை நினைத்து விட முடியாது. தான் வாழ்ந்த சமூக தேசிய சூழலுடன் தன்னைப் பிணைத்தும் உள்ளீர்த்தபடியும் தன்னைத் தன் படைப்புகளின் மூலம் வெளிப்படுத்தியவன் பாரதி. இலக்கியப் படைப்பாளியாக, பத்திரிகையாளனாக, சமுதாய சிந்தனையாளனாக, நாட்டு விடுதலைப் போராளியாகப் பல நிலைகளில் இவன் செயற்பட்டவன். (பேராசிரியர் கா. சிவத்தம்பி)

"மகாகவி என்பவன் கடந்த காலம் பற்றிய விளக்கத் தெளிவும் நிகழ்காலம் பற்றிய ஆய்வறிவும் எதிர்காலம் பற்றிய கற்பனா தரிசனம் உடையவனாகவும் விளங்குவான் ....... அதாவது இலக்கியப் பாரம்பரியத்தின் திசை திருப்பியாக மகாகவி இருப்பான்"

என்று கூறியது போலவே மகாகவியாக பாரதி இலங்கினான். இயங்கினான். தன் "மனச்சிறு புள்ளினை எங்கணும் ஒட்டி" கவி பாடிய வல்லவன் இவன். அவனின் பிறந்த நாளான இன்று அவனின் கவிதைச் சிந்தனைகளை ஒரு முறை மீட்டிப் பார்ப்பதே சுகம் தரும் ஒரு அனுபவம்தான்.

"ஆடுதல் பாடுதல் கவி ஆதிளைய கலைகளில்

## இன்று பாரதியாரின் பிறந்த தினம்

ஈடுபட்டென்றும் இருப்பவர் – பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்"

என்று பாடிய பாரதி தேசத்துக்காய் – சுதந்திரத்துக்காய் – சமூக விடுதலைக்காய் பாடினான். பாடுபட்டான். இதனாலேயே,

"வெள்ளத்தின் பெருக்கைப் போல் கவிப் பெருக்கும்
கலைப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்று பதவி கொள்வார்"

என்று நம்பினான், பாடினான். இதனாலேயே தன்னை 'இருங்கலைப் புலவனாக் குதி' என்று பாஞ்சாலி சபதத்தில் பராசக்தியிடம் அவன் வேண்டினான். 'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மீசை இல்லையடா' என்று வெறுமனே அவன் பாடிவிடவில்லை.

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்

என்ற தெளிவுடையவனாகவும் உறுதியுடையவனாகவும் இருந்தான். அதே நேரத்தில் தனக்கு முன்னிருந்த கவிமரபை ஆய்ந்து அறிந்த மேதையாக இருந்தான்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

என்று இவன் பாடியதில் கவிமனத்தையும் ஆய்வுமனத்தையும் தரிசிக்கிறோம் இன்னும் மேலும்,

'இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"

என்று அவாவி நின்றான், பாடினான் சாதித்தான்.

தான் கவிதை பாட வேண்டிய தேவையை தெய்வம் தன்னை இன்ன இன்ன காரணங்களுக்காக கவிபாடச் சொன்னது என்று பின் வருமாறு பாடுகிறான்.

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொரு தெய்வம் கூறுமே
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டிலே அறம் காட்டெனும் ஓர் தெய்வம்
பண்ணிலின்பமும் கற்பனை விந்தையும்
ஊட்டியெங்கும் உவகை பெருகிட
ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே

இதில் இவன் கவிதைச் சிந்தனைகள் சமூகத்தையே சுற்றிச் சுற்றி நிற்பதைக் காணலாம். "பாட்டுத் திறந்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்பதே இவன் கனவாக இருந்தது.

'புதியன விரும்பு' என்று புதிய ஆத்திசூடி சொன்ன பாரதி 'மந்திரம் போல் சொல்லின்பம் வேண்டுமடா' என்று சொன்ன பாரதி,

"சுவை புதிது பொருள் புதிது
வளம் புதிது சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை எந்நாளும்
அழியாத மகா கவிதை" களைப் பாடினான் . இதனாலேயே துணிந்து.

புவியனைத்தும் போற்றிட வான் புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப் புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையென்னும்
வசையென்னாற் கழிந்த தன்றே

என்று பெருமிதத்துடன் பாட முடிந்தது.

"தெளிவுறவே அறிந்திடுதல் தெளிவுதர மொழிந்திடுதல்" பாரதியின் திண்ணமான எண்ணமாக இருந்தது. இதனை பாஞ்சாலி சபத முகவுரையில்,

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோரும் நன்கு பொருள் விளங்கும் படி எழுதுவதுடன் காவியத்திற்குள்ள நயங்கள் குறைவுபடாமாலும் நடத்தல் வேண்டும்

என்று கூறுவதில் இருந்து விளங்கிக் கொள்ளலாம்.

பாரதி பாடிய தேசியப் பாடல்களும் பக்திப் பாடல்களும் வேதாந்தப் பாடல்களும் முப்பெரும் பாடல்களும் தனிப்பாடல்களும் வசன கவிதைகளும் அவன் ஆளுமையின் விகசிப்புகளாய் இன்றும் நின்று நிலைக்கின்றன.

"தேவாரத்திலும் திருவாசகத்திலும் திருவாய்மொழியிலும் திருக்குறளிலும் கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்கு தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை"

என்று பாரதி தன்னுடைய கட்டுரை ஒன்றிலே எழுதினான். அதே போல பாரதியைப் படிக்காதவர்கள் தமிழனாகவோ தமிழபிமானியாகவோ இருக்க முடியாது. இருப்பதில் அர்த்தமும் இல்லை.

த.அஜந்தகுமார்
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படுகின்றதா?

## ஜயலத் எம்.பி. கேள்வி

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது என்று மனித உரிமைகளுக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் காலை கொழும்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் அங்கு மேலும் கூறியதாவது, இன்று மக்களின் ஜன நாயக மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

கடந்த 2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் 19 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதிகமானோர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் பலர் பாதுகாப்பு கருதி வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர். எனினும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது .இதுவரை எந்த முடிவையும் காணவில்லை.

கடந்த காலங்களில் கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கப்பம் பெறும் சம்பவங்கள் அதிகரித்தன.ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனத்தில் இலங்கை கையொப்பம் இட்டுள்ளது.17 ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்ட விடயமாகும். ஆனால் அது நடைமுறைப்படுத்துவதில்லை. சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லை. தேர்தல் ஆணைக்குழு இல்லாத நிலையில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகின்றது.இது வாக்காளர்களின் உரிமைகளை மீறும் செயலாகும்.(ஓ–6)

## வன்னி தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தின் முக்கிய கலந்துரையாடல்

வன்னித் தொண்டர் ஆசிரிய சங்கத்தலைவர் R.R.ஆனந்தனின் ஏற்பாட்டில் மேற்படி கூட்டம் 14.12.2009 காலை 8.30 மணியளவில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் அவர்களுடைய யாழ். பிராந்திய அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்துரையாட இருப்பதனால் தயவு செய்து சகல வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரும்படி ஒன்றியச் செயலாளர் பொன்.சிவகரன் அவர்கள் அறியத்தந்துள்ளார்.

செயலாளர்
பொன். சிவகரன்.

(4163)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் –2008

1. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி -II -2006 & 2007
2. சிறப்புக் கலைமாணி பகுதி -III -2006

மேற்படி பரீட்சைகளை 28.12.2009 (திங்கட்கிழமை) தொடக்கம் 12.01.2010 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை , கோப்பாய் மற்றும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் , பரீட்சை அனுமதி அட்டைகளையும் 21.12.2009 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
10.12.2009

(சி/3906)

# பருவ நிலை மாறுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பால் மனித சமுதாயம் பெரும் பாதிப்புக்குள்ளாக உள்ளது

## ஆய்வில் தகவல்

பருவநிலை மாறுபாடு மற்றும் சுற்றுசூழல் பாதிப்பால் வரும் காலங்களில் மனித சமுதாயம் பெரும் பாதிப்புக்குள்ளாக உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதனால் தென்கிழக்கு ஆசியா, மத்திய அமெரிக்கா, மேற்கு ஆபிரிக்காவின் ஒரு பகுதி ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள்



தான் கடும் பாதிப்புக்குள்ளாக உள்தாகவும் புலம்பெயர்ந்த மக்களுக்கான சர்வதேச அமைப்பு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

பருவநிலை மாறுபாடு, சுற்றுச்சூழல் பாதிப்பால் இந்தப் பகுதிகளில் இருந்து அடுத்த 40 ஆண்டுகளில் 100 கோடி மக்கள் இடம்பெயர்வு மற்றும் புலம்பெயரலாம்.

கடந்த 20 ஆண்டுகளாக இயற்கை பேரழிவுகள் இருமடங்கு அதிகரித்துள்ளன. சமீபகாலமாக பூகம்பம், வறட்சி, வெள்ளம் ஆகியவை மனித சமுதாயத்துக்கே பெரும் சவாலாக உருவெடுத்துள்ளன.

மனிதன் உயிர்வாழ்வதற்கு,

அவசியமான காற்று, நீர், நிலம் ஆகிய சீர்கேடும் அதிகரித்து வருகிறது.


அதேபோல இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் புவியின் வெப்பநிலையும் 2 டிகிரி சென்ரிகிரேட் முதல் 5 டிகிரி சென்ரிகிரேட் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதுபோன்ற காரணங்களால் மனித சமுதாயம் அதிக இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது. பசுமை இல்ல வாயுக்களால் ஏற்படும் பருவநிலை மாறுபாட்டால் கடல் மட்டம் உயர்ந்து வருகிறது. இது கடலுக்கு மத்தியில் அமைந்துள்ள நாடுகளுக்கு



அச்சுறுத்தலாக உள்ளது. கடல் மட்டம் தொடர்ந்து உயருமானால் கடலுக்கு மத்தியில் உள்ள நாடுகள் மூழ்கிப்போகும் அபாயமும் உள்ளது.

இதனால் இதுபோன்ற நாடுகளில் வசிக்கும் மக்கள் தற்போதே எதிர்கால அபா




யத்தை நினைத்து பிற நாடுகளுகளுக்கு புலம்பெயர ஆரம்பித்துவிட்டனர். எங்கெல்லாம் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்துள்ளதோ அந்நாட்டைச் சேர்ந்த மக்கள் அருகில் உள்ள நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

சில நாடுகளில் சுற்றுச்சூழல் பாதிப்புமிக்க பகுதிகளில் வசிப்பவர்கள் பாதிப்பில்லாத பகுதி நோக்கி இடம்பெயர்கின்றனர். இதனால் ஓரிடத்திலேயே அதிக மக்கள் குவியும் நிலை ஏற்பட்டுள்ளது. இது மேலும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு வழி ஏற்படுத்துகிறது.

அதுமட்டுமல்லாமல் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு மக்கள் இடம் பெயரும் போது சில நேரங்களில் மக்களிடையே மோதலும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

இது எதிர் காலத்தில் பெரிய பிரச்சினையாக உருவெடுக்க வாய்ப்புள்ளதாகவும் புலம்பெயரும் மக்களுக்கான சர்வதேச அமைப்பின் ஆய்வில் தெரிய வந்துள்ளது. (ஓ-6)

# ஈரான் நாட்டு விஞ்ஞானியை அமெரிக்கா கடத்தியதாக புகார்

(டெக்ரான்)

ஈரான் நாட்டு அணு விஞ்ஞானி ஷக்ராம் அமிரி சவுதி அரேபியாவில் காணாமல் போய் விட்டார். இந்த ஆண்டு தொடக்கம் முதல் அவரை காணவில்லை. அவரை அமெரிக்கா தான் கடத்தி வைத்து இருக்கிறது என்று ஈரான் வெளிநாட்டு மந்திரி மனோச்சர் மொட்டகி குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் எங்களுக்கு கிடைத்த தகவல்கள் இந்த கடத்தலில் அமெரிக்காவின் பங்கை உறுதிப்படுத்துகின்றன. எனவே அமெரிக்க அரசாங்கம் அவரை விடுதலை செய்யும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்தார். (ஓ-6)

## வங்கி மேலாளர்களுக்கான

# ஊக்கத்தொகை அளவுகளை கட்டுப்படுத்த பிரிட்டன் நடவடிக்கை

வங்கி மேலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற போனஸ் எனப்படும் ஊக்கத்தொகையின் அளவுகளைக் கட்டுப்படுத்துகிற கடுமையான நடவடிக்கைகளை பிரிட்டன் அறிவித்துள்ளது.

நாற்பதாயிரம் டொலர்களுக்கு மேல் வழங்கப்படுகின்ற அனைத்து ஊக்கத் தொகைகள் மீதும் ஒரே தடவையாக ஐம்பது சதவீத வரி விதிக்கப்படும். இதனை ஊக்கத் தொகைகளை வழங்கும் வங்கிகள் செலுத்த வேண்டும்.

குறித்து விமர்சனங்கள் வெளியான நிலையில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் இன்னும் ஒரு சில மாதங்களில் பொதுத் தேர்தல் வரவுள்ள நிலையில் அரசாங்கம் வெளியிட்ட வரவுசெலவு கணக்குக்கு முந்தைய பொருளாதார அறிக்கையில் இந்த வரிவிதிப்பு நடவடிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் ஆண்டு வரவு செலவுக் கணக்கில் காணப்படும் மூவாயிரம் கோடி





அரசாங்கத்திடம் இருந்து உதவி நிதி களை பெற்றுவரும் வங்கிகளும் கூட தமது மேலாளர்களுக்கு கணிசமான தொகைகளை ஊக்க சன்மானங்களாக வழங்கத் திட்டமிடுவது

டொலர் நிதிப் பற்றாக்குறையை அரசாங்கம் எவ்வாறு சமாளிக்கப்போகிறது என்பது பற்றிய விபரங்களும் இந்தப் பொருளாதார அறிக்கையில் அடங்கியுள்ளது. (ஓ-6)

## அமெரிக்க மாநிலமான ஒஹியோவில்

# தனியொரு ஊசி மருந்து ஏற்றி மரண தண்டனை நிறைவேற்றம்

வழமையாக பயன்படுத்தப்படும் மூன்று மருந்துகளின் கூட்டுக்கு பதிலாக தனியொரு ஊசி மருந்தை ஏற்றி மரண தண்டனை நிறைவேற்றிய முதலாவது அமெ



கென்னத் பிரோஸ்

ரிக்க மாநிலம் என்ற பெயரை ஒஹியோ பெறுகிறது.

கென்னத் பிரோஸ் (51 வயது) என்ற நபரின் இறுதி மேன்முறையீட்டை அமெரிக்க உச்ச நீதிமன்றம் நிராகரித்ததையடுத்து மேற்படி புதிய முறையை பயன்படுத்தி அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

1991 ஆம் ஆண்டில் 22 வயது யுவதியொருவரை படுகொலை செய்ததாக கென்னத் பிரோஸ் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மரண தண்டனையை நிறைவேற்றுவ தற்காக வழமையாக பயன்படுத்தப்படும் மூன்று மருந்துகளும் சரியான முறையில்

செயற்படத் தவறும் சந்தர்ப்பங்களில் அம் மருந்துகள் ஏற்றப்பட்டவர் கடும் வேதனையை அனுபவிக்க நேரிடுவதை கவனத்திற் கொண்டே இந்த புதிய முறைநடை முறைப்படுத்தப்பட்டது.

இப் புதிய மரணதண்டனை நிவேற்றத்திற்காக உபயோகிக்கப்படும் தியோபென்டல் சோடியம் மருந்து செயற்படுவதற்கு வழமையாக பயன்படுத்தப்படும் மூன்று மருந்துகளின் கலவையுடன் ஒப்பிடுகையில் இரு மடங்கு நேரத்தை எடுப்பதாக சிலர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

எனினும் அமெரிக்க நீதித்துறை அதிகாரிகள் இக் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஊசி மருந்து ஏற்றப்பட்டு 10 நிமிடங்களின் பின் பிரோஸ் இறந்து விட்டதாகப்பிரகடனப்படுத்தப்பட்டது.

முன்னைய மூன்று மருந்துக் கலவையின் கூட்டு செயற்பட சராசரியாக 7 நிமிட நேரத்தை மட்டுமே எடுத்துக்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த செப்டெம்பர் மாதம் சிறைக் கைதியொருவருக்கு நச்சு ஊசி மருந்தை ஏற்றுவதற்கு பொருத்தமான குருதி நாளத்தை கண்டுபிடிக்க அதிகாரிகள் இரு மணித்தியால நேரத்தை செலவிட்டு மரணதண்டனை நிறைவேற்றத் தவறியதை தொடர்ந்தே ஒஹியோ மாநில நிர்வாகம் புது அணுகு முறையை நாடும் முயற்சியில் இறங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# தாயார் நஞ்சூட்டப்பட்டார் என்ற எண்ணமே ஹிட்லரை யூத சமூகத்தை வெறுக்க வைத்தது

ஜேர்மனிய சர்வாதிகாரியான ஹிட்லர், தனது தாய் யூத மருத்துவர் ஒருவரால் நஞ்சூட்டப்பட்டு கொல்லப்பட்டதாக நம்பியமை காரணமாகவே முழு யூத சமூகத்தையுமே வெறுத்ததாக புதிய புத்தகமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



'ஹவ் வேல்ட் வார் I லெட் ருத ஹொலோ காஸ்ட்' என்ற புத்தகத்திலேயே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

மார்பு புற்றுநோயால் இறந்த தனது தாயாரான கிளேராவின் மரணம் 18 வயதான ஹிட்லரின் உள்ளத்தில் நீங்காத வடுவாக பதிந்திருந்ததாக மேற்படி நூலின் ஆசிரியரான ஜோசிம் றிக்கர் குறிப்பிட்டுள்ளார்.

தனது தாயின் புற்றுநோய் சிகிச்சைக்காக இரசாயன மருந்தை வழங்கிய மருத் துவர் எதுவார்ட் பிளோச் சேதனது தாயின் மரணத்துக்கு காரணமென்பதில் ஹிட்லர் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார்.

கிளேறா 1907 ஆம் ஆண்டு தனது 47 ஆவது வயதில் மரணமானார்.

யூதர்கள், காசநோய் போன்றவர்கள் எனவும் தான் அவர்களை நசுக்குவதற்கு பிறந்த இரட்சகர் எனவும் ஹிட்லர் ஒரு தடவை தனது உதவியாளர்களிடம் உரையாடுகையில் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## வாயில் மென்ற போது

# சுவிங்கம் வெடித்து மாணவர் மரணம்

(கொனோடாப்)

உக்ரைன் நாட்டைச் சேர்ந்த கொனோடாப் நகரைச் சேர்ந்தவர் பெலிவ் (வயது 20) கல்லூரி மாணவர்.

வேதியியல் துறையில் படித்து வந்தார். இவருக்கு அடிக்கடி சுவிங்கம் சாப்பிடும் பழக்கம் உண்டு. சுவிங்கத்தை சிட்ரிக் ஆசிட்டில் தொட்டு சாப்பிடும் பழக்கத்தை கொண்டிருந்தார்.

சம்பவத்தன்று சுவிங்கத்தை சிட்ரிக் ஆசிட்டில் தொடுவதற்குப்பதிலாக வெடிக்கும் திறன் கொண்ட இரசாயன கலவையில் தவறுதலாக தொட்டு சாப்பிட்டார்.

கடித்து சாப்பிடும் போது சுவிங்கம் திடீரென வாய்க்குள்ளேயே வெடித்தது.

இதில் முகம் சிதறி அந்த இடத்திலேயே மாணவர் பலியானார்.

(ஓ-6)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 5 விதி எண் : 3

### உடலமைப்பு

பிறந்த எண் 5, விதி எண் 3 ஆகக் கொண்டவர்கள் புதன், குரு ஆகிய இரு சுபக்கிரகங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இந்த வகையினர் உயரமானவர்களாகும் பிறரைக் கவரும் தோற்றத்துடனும் காணப்படுவர்.

### மன, குணவியல்பு

இவர்கள் நீதி, நேர்மையானவர்களாகவும் நியாயத்திற்கு கட்டுப்பட்டவர்களாகவும் இருப்பர். எப்போதும் எதிலும் அவசரத்தைக் காட்டமாட்டார்கள். எதையும் ஆழ்ந்து சிந்தித்த பிறகே செய்வர்.

பொறுமைக்கு இலக்கணமாகத் திகழ்வர். அடக்கத்துடன் காணப்படுவர். இவர்களின் பேச்சும் அடக்கமாகவே இருக்கும். பிறர் மனம் நோகும்படி பேசமாட்டார்கள். அதுமட்டுமின்றி, இவர்கள் வீண் பேச்சு பேசமாட்டார்கள். தம் பேச்சால் ஏதேனும் நன்மை இருக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்கள்.

இவர்கள் மனத்தில் இரகசியம் என்று எதுவும் இருக்காது. மனத்திலுள்ளதை வெளிப்படையாகப் பேசி விடுவர். கள்ளங்கபடமறியாதவர்கள்.

இவர்கள் தவறு செய்யமாட்டார்கள். அப்படித் தெரியாமல் செய்து விட்டாலும் தெரிந்த பிறகு திருத்திக் கொள்வர். பிறரிடம் தவறு கண்டாலும் அதை வெளிப்படுத்தவும் தயங்கமாட்டார்கள். அதனால் பிறரின் மனக்கசப்புக்குள்ளாக நேரும்.

நினைத்த காரியத்தை எப்படியும் முடித்து விட வேண்டுமென்ற இலட்சியம் கொண்டவர்கள். தன் காரியத்தினால் தனக்கு மட்டுமின்றி, பிறருக்கும் பயன்படும்படி அமைய வேண்டுமென்று நினைப்பர்.

அதனால் எதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பின்தான் செயல்படுவர். அதனால் பிறரின் பாராட்டுதலைப் பெறுவர். இவர்கள் மனம் புதியதைக் கண்டுபிடிப்பதில் அதிகக் கவனம் செலுத்தும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத்துணை நல்ல முறையில் அமையும். இவர்கள் தம் உற்றார் உறவினர்களிடமும் சுமூகமாகவே நடந்து கொள்வர். தம்மாலியன்ற உதவியைச் செய்வர். அதனால் குடும்பத்தில் சந்தோஷம், அமைதி நிலவும்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலையார்வமுள்ளவர்களாகவும், சங்கீதம், நாட்டியம் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருப்பர். கல்வி அறிவிலும் குறைவிருக்காது. சட்ட நுணுக்கம் தெரிந்தவர்களாகவும் சமயத் தொடர்பில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருப்பர்.

இவை தவிர வண்டி வாகனத் தொடர்பிலும், பல்வேறு பொருட்களை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டிருக்கக்கூடும்.

இவர்கள் அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிபவராக இருப்பர்.

இவர்கள் எத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தாலும் தனித்தன்மை பெற்றவர்களாகவும் பிறரின் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் தகுதியுள்ளவராகவும் இருப்பர். அத்துறையில் பெருமளவு பொருள் சேர்ப்பர்.

### ஆரோக்கியநிலை

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான காய்ச்சல், மூலம், இரத்தக் கொதிப்பு, கண் நோய் போன்றன உண்டாகும். மூட்டுவலி, வீக்கம் ஏற்படவும் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன், குரு ஆதிக்கமுள்ள 5,3 தொடர்புடையனவற்றில் யோகமான எண்ணுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்குக் கூட 5,3 தொடர்புள்ள பெயரே சிறந்தது.

இவர்களுக்கு 5,3 வுடன் செவ்வாய் தொடர்புடைய 9 எண்ணும் நன்மை தரவல்லவை. இது தொடர்பான திகதிகளும் அதிர்ஷ்டமானவை. ஆனால் சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற 6 தொடர்புடைய எண்களும் திகதியும் யோகமற்றவை.

## உடல் எண் : 5 விதி எண் : 4

### உடலமைப்பு

பிறந்த எண் 5, விதி எண் 4 ஆகக் கொண்டவர்கள் புதன், ராகு இருவரின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் சற்று உயரமானவர்களாகும், பிறரைக் கவரும் தோற்றமுள்ளவர்களாகவும் இருப்பர். தலைமுடி சுருண்டிருக்கும். இவர்கள் உடல் பலம் கொண்டவர்களாக இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் கள்ளங்கபடமறியாதவர்கள், மனத்தில் ஒன்றும் வெளியில் இன்னொன்றும் பேசமாட்டார்கள். அதேபோல யாரிடம் எதைப் பேச வேண்டும், எந்த இடத்தில் எதைப் பேச வேண்டும் என்று கூடத் தெரியாதவர்கள். அதனால் இவர்களின் பேச்சு பல பிரச்சினைகளை உண்டாக்கிவிடும். அதனால் பிறரின் பகைக்கும் வெறுப்புக்கும் ஆளாக நேரும். இவர்கள் இருக்குமிடம் பிரச்சினை நிறைந்து கொந்தளிப்புக் கொண்டதாக இருக்கும்.

இவர்கள் சுதந்திரப் பிரியர். யாருக்கும் கட்டுப்படமாட்டார்கள். எதையும் தன்னிச்சையாகச் சிந்தித்து செயல்படும் ஆற்றல் பெற்றவர்கள். எப்போதும் சுறுசுறுப்புடன் எதை யாவதொன்றைப் பற்றிச் சிந்தித்த வண்ணமும் செய்த வண்ணமுமாக இருப்பர்.

இவர்கள் நல்லவர்கள். பிறருக்கு சிறு தீங்கும் செய்யமாட்டார்கள். ஆனால் பிறர் தனக்குத் தீங்கு நினைத்தால் பழிவாங்க அஞ்சமாட்டார்கள். அவர்களை இருக்குமிடம் தெரியாமல் செய்து விடுவர். அந்த அளவுக்கு வல்லவர்களாகவும் இருப்பர். இவர்களிடம் முன்கோபம் இயல்பாகவே இருக்கும்.

இவர்கள் பேச்சாற்றலில் வல்லவர்களாகவும் பிறர் மனம் கவரும்படி பேசக்கூடியவர்களாகவும் இருப்பர். இவர்கள் வாசனைத் திரவியப் பிரியராக இருப்பர். வாகனப் பிரியரும்கூட. ஊர் சுற்றிப் பார்க்க ஆர்வமுள்ளவர்.

கடவுள் பக்தி இவர்களிடம் இயல்பாகவே இருக்கும். எப்போதும் இவர்கள் நண்பர்கள் சூழ்ந்தே காணப்படுவர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத்துணை நல்ல முறையில் அமையும். புத்திரபாக்கியத்திற்கும் குறைவு இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உற்றார் உறவினருடன் சுமூக போக்கு இருக்கும்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் கலையார்வம் கொண்டவர்களாக இருப்பதோடு இயற்கையை ரசித்து வர்ணிப்பதில் வல்லவர்களாகவும் இருப்பர். அதனால் சிறந்த வர்ணனையாளராக இருக்கக்கூடும்.

அத்துடன் சாஸ்திரம், சமயம், ஜோதிடம், சட்டம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றவராகவும், பிறருக்கு அறிவுரை கூறவும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடியவர்களாகவும் இருப்பர். வழக்கறிஞர், நீதிபதியாகவும், பஞ்சாயத்துத் தலைவராகவும் இருக்கக்கூடும்.

மேலும் இரும்பு எந்திர, வாகனப் பொருட்களைத் தயாரித்தல் அல்லது அது தொடர்பில் பணியோ கமிஷன் ஏஜெண்டாகவோ இருக்கக்கூடும். இவர்கள் எந்தத் துறையில் இருந்தாலும் பெருமளவு பொருள் சம்பாதித்து சொத்து, சேர்ப்பவராக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை


இவர்களுக்கு நரம்புத் தளர்ச்சியும், அதனால் கை நடுக்கம் போன்ற நோய்களும் ஏற்படக்கூடும். அத்துடன் உஷ்ண சம்பந்த நோய்களும் இருதய பலவீனம், மாரடைப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது. சிறுநீரகக் கோளாறுகளுக்கும் ஒரு சிலர் ஆளாகக்கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன், சூரியன், சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற 5,1,6 தொடர்புடைய விஸ்தார எண்களில் யோகமான எண்களில் ஒன்றிற்கு பெயர் அமைத்துக் கொள்ளலாம். அதைப் போன்று தம் நிறுவனங்களுக்கு 5,1,6 தொடர்புடைய எண்களிலான பெயரே யோகமானவை.

இவர்களுக்கு 5,1 தொடர்புடைய எண்களும் திகதிகளும் யோகமானவை. இவர்களுக்கு கெடுதல் அளிக்கும் எண்களும் திகதிகளும் குறிப்பிட்டுக் கூற இயலாது. (தொடரும்)















கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசுதின நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி. ரி. செல்வரட்ணம், சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடன நிகழ்வு இடம்பெறுவதையும் கல்லூரி அதிபர் திருமதி சகாதேவன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

அகமுடையானை எமனுக்கு கொடுத்தாலும் –கொடுப்பேன். சக்களத்திக்கு கொடுக்க மாட்டேன்

~ வங்காளம்

வலம்புரி

## யுத்த வெற்றியில் மயங்கிய இலங்கை வெளிநாடுகளிடம் அடிமைப்பட்டுள்ளது

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தவர்களை வெற்றி கொண்டுவிட்டோம் என்ற வீரப் பேச்சு பெரும்பான்மை மக்களை ஆட்கொண்டுள்ளது.

வெற்றி என்ற பெறுகை நாடு முழுமைக்குமாக இருக்க வேண்டும். ஒரு நாட்டிற்குள் இருக்கக் கூடிய இரு இனங்கள் மோதிக்கொண்டு அதில் ஒரு இனம் வெற்றி அடைவது என்பது நாட்டிற்கான ஒட்டுமொத்தத் தோல்வி ஆகும்.

எனினும் இந்த உண்மையை அரசு உணர்வதாக இல்லை.

இன மத மொழி பேதங்களால் வேறுபட்டு நிற்பதன் விளைவு நெடுந்துயரம் என்பது இந்த நாட்டின் பட்டறிவு.

இந்த துயரை அனுபவித்த இலங்கை நாடு இப்போது ஒரு 'இடைவேளை'யை சந்தித்துள்ளது.

பாரிய யுத்தம் முடிந்து விட்டது என்ற முடிபில் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இழுத்தடிக்கப்படும் காலதாமதம் இடைவேளையின் காலத்தை குறுக்கி மீண்டும் ஒரு அத்தியாயத்தை நோக்கி நகர்த்தும்.

எனவே உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு சமாதான வழியில் தீர்வு காண வேண்டும்.

ஒரு குடும்பத்திற்குள் குழப்பம் ஏற்பட்டுவிட்டால் அது அந்த குடும்பத்திற்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்துமோ அதே போன்றதுதான் உள்நாட்டு பிரச்சினைகளும்.

ஆளப்பிறந்தவர்கள் நாம் என்ற குறுகிய நினைப்புகள் நாட்டின் முன்னேற்றத்திற்கான முதற்தடைக்கல்லாகும்.

இருந்தும் இந்த உண்மைகள் உணரப்படாமல் இருப்பது வேதனைக்குரியது.

யுத்தம் முடிந்து வெற்றி வாகை சூடிவிட்டோம் என்று கூறும் இலங்கையில் இப்போது ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் யாரைத் தேர்ந்தெடுப்பதென்பதை இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

ஆனால் நாட்டு மக்களுக்கு அந்த உரிமை இருக்கின்றதா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

வெறுமனே புள்ளடிகளை மட்டும் போடுபவர்களாக மக்கள் இருப்பதானது இந்த நாட்டின் ஆரோக்கியமற்ற இறையாண்மையையே காட்டி நிற்கும்.

ஏனெனில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் யாரை ஜனாதிபதியாக தெரிவு செய்வதென்பதில் வெளிநாடுகள் முனைப்புக்காட்டி நிற்கின்றன.

குறிப்பாக அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கையின் ஜனாதிபதியாக 'இவர்தான்' இருக்க வேண்டும் என நினைக்கின்றன.

இந்தியத் தேர்தலின் போது இலங்கை ஏதேனும் கருத்துக்கூற முடியுமா?

ஆக, வன்னிப் போரில் வெற்றி கண்ட இலங்கை அரசு அமெரிக்காவிடமும் இந்தியாவிடமும் அடிமைப்பட்டுவிட்டது.

இந்த அடிமைத்தனம் நீங்கும் என எதிர்பார்க்க முடியாது. மாறாக வெளிநாட்டு ஆதிக்கம் இலங்கையில் வேகம் எடுப்பதற்கான சாத்தியங்களே தாராளமாக உள்ளன.

# விலை மதிக்கக்கூடிய ஆலயச்சிலைகள் வவுனியா புளியங்குளத்தில் மீட்பு

(கொழும்பு)

வவுனியா புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த விலை மதிக்க முடியாத 39 ஆலய சிலைகள் புளியங்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

புளியங்குளம் கிராமத்தில் மீள்குடியேறிய மக்கள் ஆலயப் பகுதியில் சிரமதானப்பணியில் ஈடுபட்டிருந்த போதே இந்த சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட இந்த சிலைகள் இந்திய சிற்பிகளால் செதுக்கப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. யுத்தம் காரணமாக சிலைகளுக்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இவை புதைக்கப்பட்டிருக்கலாம் என அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மாங்குளம் பொலிஸ் அத்தியட்சகர் ரத்மால் கொடிதுவக்கு இந்த சிலைகள் தொடர்பாக தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளதுடன் அவை குறித்து தீர்மானிப்பதற்காக அனுராதபுரத்தில் உள்ள தொல்பொருள் நிபுணர்களை புளியங்குளத்திற்கு அனுப்பி வைக்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (6)

## கொழும்புக்கு வெளியே அதிவேக சுற்று வட்டப்பாதை

(கொழும்பு)

கொழும்புக்கு வெளியில் அமையவுள்ள அதிவேக சுற்று வட்டப்பாதையின் நிர்மாணப்பணிகள் ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மூன்று கட்டடங்களில் செயற்படுத்தப்படவுள்ள இந்த அதிவேக நெடுஞ்சாலை கொண்டாவையில் இருந்து மஹரகம, கடுவெல, பியகம, மஹர, வத்தளை ஊடாக கெரவலப் பிட்டிய வரை நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதன் முழுமையான நீளம் 29.1 கிலோ மீற்றர் ஆகும். ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஜய்க்கா நிறுவனம் என்பவற்றின் உதவியும் இந்தத் திட்டத்திற்குக் கிடைத்துள்ளது. (6)

## 5வருடங்களில் தனி நபர் வருமானத்தை 2மடங்காக அதிகரிக்க திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த 5 வருடங்களில் தனி நபர் வருமானத்தை இரண்டு மடங்காக அதிகரிக்க எண்ணியிருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். 2008ஆம் ஆண் டில் இலங்கையில் தனிநபர் வருமானமா னது 2014 டொலர்களாக காணப்பட்டது.

இதனை நான்காயிரமாக அதிகரிக்க எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் முடிவடைந்துள்ளதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் நாட்டின் பொருளா தார செயற்பாடுகளில் இணைக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் துரித அபிவிருத்தி நோக்கி நாடு பயணிக்கும் எனவும் அஜித் நிவாட் கப் ரால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# கேட்டதும் தரமாட்டார் கடவுள்

சிவபெருமானை சந்தித்தான் ஒரு மனிதன் "சுவாமி, பத்து இலட்சம் ஆண்டுகள் என்பது உங்கள் கணக்கில் எப்படி?" என்றான். "ஒரு விநாடி" என்றார் சிவன் "சரி எங்கள் பூலோகத்தில் பத்து கோடி ரூபாய் என்பது உங்கள் கணக்கில் எப்படி?" என்றான். "ஒரு ரூபாய்" என்றார் சிவன் "அப்படியா.... சந்தோஷம் சுவாமி நீங்கள் எனக்கு உங்கள் கணக்கில் ஒரு ரூபாய் தாருங்களேன்" என்று கைநீட்டினான் மனிதன் "தருகிறேன், என் கணக்கில் ஒரு விநாடி கழித்து வா" என்று அனுப்பி விட்டார் சிவன்.

மனிதன் கடவுளிடம் தான் கேட்பதெல்லாம் உடனே நடந்து விட வேண்டும் என நினைக்கிறான். ஆனால், அவரவர் விதிப்படிதான் எதுவும் நடக்கும்.

# வெள்ளி நற்சிந்தனை பக்தியின் மொழி தமிழ் 101

வழி நடைப் பயணத்தின் இடையே கடந்து செல்லும் இயற்கைக் காட்சியின் அழகு பயணக் களைப்பை ஆற்றிப் புத்துணர்ச்சி தரவல்லது. சுந்தரரின் தவம் நோக்கிய பயணத்தில் அவர் பெற்ற மகிழ்வான அனுபவத்தை எல்லோருக்கும் எடுத்துக் கூறவிரும்புகிறார். வாகனங்களில் பயணத்தை மேற்கொள்வதற்கு நினைப்பவருக்கு இயற்கையை ரசிக்கும் வாய்ப்புக் குறைவுவேகமாகச் செல்வதும் இதற்கு ஒரு காரணமாகும். சுந்தரர் கால்நடையாகத்திருத்தலம் காணச் சென்றவர் அவரது மனதிலே ஒரு குறை ஏனைய மெய்யடியார் போல இறைவனிடம் சேரமுடிய வில்லையே என்ற ஆதங்கம் அதைப்பற்றியே எண்ணியபடி திருவையாறு திருத்தலத்தை நோக்கி வழி நடைப் பயணமாகச் செல்கிறார்.

வழியில் காணும் இயற்கைக் காட்சிகளிலிருந்து கண்களை அகற்ற முடியில்லை. அவ்வாறு அழகையே ரசிக்க விரும்பும் தன்னையும் ஏனைய அடியார் நிலையையும் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்க்கிறார். பழகிய நிலையில் இறைபணி செய்தவர். பெற்ற பயன் என்ன எனத் தன்னால் அறியமுடியவில்லையே என்ற வருத்தம் அவர் மனதில் இருந்தது. இறைவன் தனக்கு ஆட்பட்டோருக்கு அருள் செய்யும் கருணையையும் எண்ணுகிறார். அவர் மனதிலே ஓர் உறுதி பிறக்கிறது. உள்ளதை உள்ளவாறு கூறி வருவதை எதிர்கொள்ள விரும்புகிறார்.

இறைவன் அரையிலே சீறும் பாம்பைச் சாற்றியிருக்கும் கோலம் மனக்கண்ணில் தெரிகிறது. தன்னிடம் சரண் அடைந்தவருக்கு அருள் செய்யும் இறைவனின் தனிப் பெருங்கருணையை எல்லோரும் அறிய வேண்டும் என்ற பரநலம் அவர் எண்ணத்தில் படர்கிறது. இயற்கையின் அழகுக் கோலங்களை எமக்காக, எமது மனத்தை நாம் பண்படுத்துவதற்காக இறைவன் படைத்திருப்பதை உணர்கிறார். சுற்றுப்புறமெங்கும் செறிந்திருக்கும் இயற்கையின் வளம் அவரைப் பரவசப்படுத்துகிறது. உலகியல் நிலையில் அழகைச் சுவைக்கும் இளமைப்பருவமுடைய சுந்தரர் ஒரு புதிய அனுபவத்தைப் பெறுகிறார். வாழை குலையோடு வளத்தைச் சாற்றி வளர்ந்து நிற்கிறது. குலைகளைப் பார்க்கும்போது நிலத்தின் வளம் நன்கு தெரிகிறது. அதற்கு மேலாக உயர்ந்து நிற்கும் குலையோடிருக்கும் தெங்கின் தோற்றம் உணவுச் சுவையை நாவில் படர வைக்கிறது. "வாழைக்குலைத் தெங்கு" எனப் பாடலில் வருந்தொடர் இரு பொருள் கொள்ளும் தன்மையது

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

"வாழைக்குலையென" வாழையுடன் சேர்ந்து ஒரு பொருள் தரும் "குலைத்தெங்கு" எனத் தெங்கு என்னும் சொல்லுடன் சேர்ந்து இன்னொரு பொருள் தரும் சுந்தரருடைய செந்தமிழ்ப் பயிற்சிக்கு இத் தொடர் ஒரு எடுத்துக் காட்டாகும். கரை மேல் இரு விளைபொருளும் கொணரும் அழகிய திரையாகும். காவிரியாற்றின் ஓட்டம் திருக்கோயிலின் வளமான நிலப்பண்பையும் விளக்கி நிற்கிறது. திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளுக்குப் பயன்படுத்தப்படும் வாழைப் பழமும், இளநீரும், தேங்காயும் இயற்கையின் கொடையாக இருக்கின்றன. இத்தகைய இயற்கை வளம் கொண்ட திருக்கோயிலுக்கு எல்லோரையும் வழிநடைப் பயணமாக வரும்படி பாடல் அழைக்கிறது.

"பழகா நின்று பணி செய்வார் பெற்ற பயன் ஒன்று அறிகிலேன்
இகழாது உமக்கு ஆட்பட்டோருக்கு வேகபடமொன்று
அரைச்சார்த்தி
குழகா வாழைக்குலைத் தெங்கு கொணர்ந்து கரைமே
லெறியவே
அழகார் திரைக்காவிரிக் கோட்டத்தை யானுடைய வடிகளோ"

# சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்கள், விவசாயிகள் கால்நடைப் பண்ணையாளர்களை கௌரவிக்கும் வைபவம்

2009 ஆம் ஆண்டுக்குரிய சிறந்த விவசாயிகள், சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்கள், சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களை கௌரவிக்கும் வைபவம் நாளை சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார், கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப்பணிப்பாளர் டாக்டர். திருமதி வ. அமிர்தலிங்கம் ஆகியோரது தலைமையில் நடைபெறவுள்ளது.

மாவட்ட ரீதியில் வீட்டுத்தோட்டப் போட்டியில் முதன் மூன்று இடங்களைப் பெற்று மாவட்ட ரீதியில் வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வெற்றியாளர்களின் பெயர் விபரம் வருமாறு ,

**நீர் வளமுள்ள இடத்திலான வீட்டுத் தோட்டப் போட்டி.**

செ. நிஷாந்தினி - உரும்பிராய் வடக்கு, செ.போல்துரைநாயகம் - பெரியவிளான், து. வற்சலா - துர்க்காபுரம்.

**நீர் வளம் குறைந்த இடத்திலான வீட்டுத் தோட்டப் போட்டி.**

சு. சின்னத்தம்பி - இருபாலை கிழக்கு, ம. புஸ்பநாதன் - வேலணை வடக்கு, தி. பிறின்ஸ் பிலிப் - நவாலி வடக்கு.

வெற்றியாளர்களுக்கு முதலாம் பரிசாக 12,000 ரூபாவும், 2 ஆம் பரிசாக 8,000 ரூபாவும், 3 ஆம் பரிசாக 5,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

**சிறந்த விவசாயிகள் போட்டி.**

புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்கும் சிறந்த சேதனச் செய்கையாளர்.

க. வீரசிங்கம் - தொட்டிலடி சங்கானை, சு. செல்வராசா - கோண்டாவில், கு. மகேஸ்வரி - சுன்னாகம் தெற்கு,

**நிலக்கடலைச் செய்கையில் புதிய திருந்திய தொழில்நுட்பங்களை கையாண்டு உயர் விளைவு பெற்ற விவசாயி**

கி. சிறிகுமார் - புதுகலட்டி அத்தாய், இ. நந்தகுமார் - சண்டிலிப்பாய் வடக்கு, த. ஜெயராசா - கோப்பாய் மத்தி

**நெல் உற்பத்தியில் உயர் விளைவு பெற்ற விவசாயி**

க. அருளானந்தம் - நாவற்குழி கைதடி, ந. சர்வானந்தம் - கெருடாவில் கிழக்கு, செ. குணசேகரம் - மல்லாகம் தெற்கு

**உள்ளூர் விவசாய உற்பத்தியிலிருந்து பெறுமான அதிகரிப்பை மேற்கொள்ளும் விவசாயி**

சி. சிவனேஸ்வரி - மாதகல் கிழக்கு, க. திருத்தேவி - ஏழாலை கிழக்கு, ந. சிறிநந்தினி - உடுப்பிட்டி மத்தி

**மாமரச் செய்கையில் புதிய தொழில் நுட்பங்களை கையாண்டு உயர் வருமானம் பெறும் விவசாயி**

சி. செல்வநாயகம் - கச்சாய் தெற்கு, ப. சண்முகநாதன் - சண்டிலிப்பாய், இ. ரஞ்சித்குமார் - வேலணை மேற்கு.

வெற்றியாளர்களுக்கு முதலாம் பரிசாக 2,000 ரூபாவும், 2 ஆம் பரிசாக 1,500 ரூபாவும், 3 ஆம் பரிசாக 1,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

**சிறந்த கால்நடைப் பண்ணையாளர்**

**மாடு வளர்ப்பு**

கனகரட்டினம் மிபாகரன் - ஊர்காவற்றுறை, செல்வராசா ரவிக்குமார் - நவிண்டில் கரவெட்டி, வேலுப்பிள்ளை குமாரவேலு - மீசாலை வடக்கு, கொடிகாமம்.

**ஆடு வளர்ப்பு**

நடராசா தவராசா - அராலி மேற்கு வட்டுக்கோட்டை, சு. தர்மராசா - கோகில வீதி கோண்டாவில், வல்லிபுரம் சுதாகரன் - நீதிமன்ற வீதி மல்லாகம்.

**கோழி வளர்ப்பு**

மாணிக்கம் தவராசா - ஏழாலை தெற்கு சுன்னாகம், கி. இராஜ்குமார் - நடுக்குடத்தனை, குடத்தனை, சிவபாதலிங்கம் சபிந்தன் - இருபாலை கிழக்கு கோப்பாய்.

வெற்றியாளருக்கு முதலாம் பரிசாக 3,000 ரூபாவும், 2 ஆம் பரிசாக 2,250 ரூபாவும், 3 ஆம் பரிசாக 1,500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "ஒரு பயிர் ஒரு கிராமம்" எனும் திட்டத்தின் கீழ் 42 பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட உள்ளன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக மாகாண விவசாயப் பணிப்பாளர், திரு கோணமலை க. சுப் பிரமணியம் கலந்து சிறப்பித்ததுடன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்ப் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், யாழ்பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம், யாழ் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம். பற்றிக் டிறஞ்சன், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி செ. விஜயரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

# 671 அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கு மூன்று மாதங்களுக்குள் தீர்வு காணப்படும்

## பிரதி நிதியமைச்சர்

அரசியல் கைதிகளின் பிரச்சினைகளை அரசியல் மயப்படுத்தி பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளக்கூடாது சிறைச்சாலைகளில் தடுத்துவைக் கப்பட்டுள்ள 671 அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கு மூன்று மாதங்களுக்குள் முற்று முழுதான தீர்வுகாணப்படும் என்று நீதி மற்றும் மறு சீரமைப்பு பிரதியமைச்சர் வி.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் அவர்களின் கோவைகளை ஆராய்வதற்கும் சட்டத்தரணிகள் 10 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஆராயப்பட்ட கோவைகளின் அடிப்படையில் இரண்டு மாதங்களுக்குள் 46 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள் ளனர் என்றும் அவர் சென்னார். நீதி, சட்ட மறு சீரமைப்பு அமைச்சின் கேட் போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். இந்த மாநாட்டில் பிரதியமைச்சர்களான பெ.இராதகிருஸ்ணன், வடிவேல்சுரேஸ் ஆகியோரும் பங்கேற்றனர்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரி விக்கையில் ,

அரசியல் கைதிகள் விடயத்தை ஊடகங் கள் அரசியல் மயப்படுத்தக் கூடாது அவர்க ளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆழமாக சிந்தித்து முடிவெடுத்துள்ளோம் . சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த 10 சட்டத் தரணிகள் அவர்களின் கோவைகளை பரி சீலிருத்து வருகின் றனர் .

இவ்விடயத்தை கையாள்வதற்கு அமைச்சர் மிலிந்தமொரகொட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் , சட்டமா அதிபர் உள்ளிட்டோர் அடங்கிய அதிகாரம் கொண்ட உயர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவில் நானும் அடங்குவேன். அரசியல் கைதிகளின் பிரச்சினையை அரசியல் மயப்படுத்தல் வேண்டாம். இவ்வா றான செயற்பாடுகள் மூலம் சிறையில் இருப்பவர்களுக்கே பிரச்சினையாக அமையும் என்றார். (ஓ-6)

# டெங்கினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 286 ஆக உயர்வு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் டெங்கு நோயினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 286 ஆக உயர்ந்துள்ளது.

இந்நோயினால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 30,784 என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது. மாத்தளை மாவட்டத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கடந்த மாதத்தில் உயர்ந்திருந்தது. அங்கு 114 பேர் இந்த நோயால் பீடிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

மழையுடன் கூடிய காலநிலையை எதிர் கொள்வதால் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த சுற் றாடலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு பொது மக்களைக் கேட்டுள்ளது. (ஓ-6)

மக்கள் வங்கி
யாழ்ப்பாணப் பிரதேச
விளையாட்டுக்கழகம் நடாத்தும்
விளையாட்டு விழா-2009
இடம்
யாழ்.துரையப்பா விளையாட்டு
மைதானம்
காலம்
12.12.2009 சனிக்கிழமை
காலை 08.30
பிரதம விருந்தினர்
திரு P.V. பத்திரண
பிரதம நிறைவேற்று அதிகாரி/
பொது முகாமையாளர்
மக்கள் வங்கி
கௌரவ விருந்தினர்
திரு . N.வசந்தகுமார்
சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர்
(திறைசேரி.சர்வதேச வர்த்தகம்)
மக்கள் வங்கி
(C-3894)

# ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடை பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் "தேவி பாகவதம்" எனும் தொடர் சொற்பொழிவினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் வழங்கவுள்ளார்.(ஓ-35)

நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது இனிய நத்தார் வாழ்த்துக்கள்...
BRIGHT
ELECTRICAL HOME APPLIANCES
KANCHAN
உலகப் புகழ்பெற்ற BRIGHT மற்றும் KANCHAN வீட்டுப் பாவனைப்
பொருட்களுக்கு ஏக முகவரான
BRIGHT HOME APPLIANCES (PVT) LTD.
நிறுவனம் தமது யாழ்மாவட்டத்திற்கான ஏக விநியோகஸ்தராக
Karan Electrical
நிறுவனத்தைப் பெருமையுடன் நியமனம் செய்துள்ளது




யாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் ஓர் பங்களிப்பு




KARAN ELECTRICAL
யாழ் மாவட்டத்திற்கான ஏகவிநியோகஸ்தர்
கரன் எலெக்ரிக்கல்
தொலைபேசி : 021 222 8772
021 222 4505
இல: 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் (சி/3907)
தொலை நகல் : 021 222 4505
Harikanan, Jaffna




















**யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் விருந்தினர்கள் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் சமயத் தலைவர்களையும், மனித உரிமை தினத்தை முன்னிட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மரக் கன்று நாட்டி வைப்பதையும், மனித உரிமை ஆர்வலர்களால் முன்னெடுக்கப்பட்ட பேரணி மற்றும் தீபம் ஏற்றும் நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.**


# ACCA to your future in Finance and Accounting

***Association of Charted Certified Accountants***

வழங்கும்
யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் -கல்வியாண்டு- 2010
இலங்கை உட்பட 170 நாடுகளில் அங்கீகாரம் பெற்ற முதற் தர சான்றிதலளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனம்.

**(1) Certified Accounting Technician (*CAT*)**
**சான்றிதலளிக்கப்பட்ட கணக்கீட்டு தொழில்நுட்பம்.**
(விண்ணப்பிப்பதற்கு கீழ்வரும் ஏதாவது ஒரு தகைமை போதுமானது)
- முகாமைத்துவ,வணிக கற்கைகளில் ஆர்வமுடையவர்கள், அடிப்படை தகுதிகளை எதிர்பார்ப்பவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.
- க.பொ.த (சா/தா) தகுதி / பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் வண்ணப்பிக்கமுடியும். மேலும் வெளிநாடுகளில் வேலையுடன் தொடரக்கூடிய வசதிகள் வழங்கப்படுகிறது.
- தொழில் சார் அனுபவமுடையவர்கள்
- 16 வயதுக்கு மேற்பட்டவர்களாயின் விண்ணப்பிக்க முடியும்.

**(2) Association of Charted Certified Accountants (*ACCA*)**
**சான்றிதலளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் கற்கை நெறி.**
(விண்ணப்பிப்பதற்கு கீழ்வரும் ஏதாவது ஒரு தகைமை போதுமானது)
- G.C.E (O/L) மூன்று பாடங்களுட்ன் G.C.E (A/L) இரண்டு பாடத் தகுதிகள் போதுமானது. கணிதம் ,ஆங்கிலம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த (உ/த)த்தில் பரீட்சை பெறுபேறு கிடைக்கப்பெற்ற எத்துறை சார்ந்தவர்களும் விண்ணப்பிக்கமுடியும். உ+ம்: வர்த்தகம், கலை, விஞ்ஞானம், கணிதம்
- துறை சார்ந்த தொழில் தகுதியுடையவர்கள்.. உ+ம்: வங்கியாளர்,உத்தியோகத்தர்கள்
- 21 வயதுக்கு மேற்பட்டவர்களாயின் Mature Student Entry Route வகையில் அனுமதி
- வகுதி (1),(2) கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்கள் B.Sc(Hons) in Applied Accounting கற்கை நெறியினை Oxford University -UK இல் பூர்த்தி செய்வதற்கான விசா Work permit உடன் வழங்கப்படுகின்றது.

**(3) Graduate/ Under Graduate Programme:**
விலக்களிப்புத் திட்டம் (முழுமையாக/ பாட ரீதியாக):
Exemption Scheme: B.Com/BBA/HNDA/HNDM/HNDBS
- இத்திட்டத்தின் கீழ் வகுதி (1), (2) இல் குறிப்பிட்டுள்ள கற்கை நெறிகளில் பட்டதாரிகள் உள்வாங்கப்படவுள்ளனர்.
- இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக, உயர் தொழில்நுட்ப மாணவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பிக்கும் முறை: சுயவிபரக் கோவையுடன் (பெயர், விலாசம், தொலைபேசி இல, கல்வித் தகைமை) போன்ற விபரங்களுடன் தெரிவு செய்த புலமைப் பரிசில் திட்டத்தின் பெயரினை (3 திட்டங்களிலிருந்து) இடது பக்க மேற்பகுதியில் குறிப்பிட்டு தபாலினூடாக அனுப்பிவைக்கவும்.

தெரிவு முறை: புலமைப் பரிசில் திட்டம், கட்டணச்சலுகை, கற்கை நெறி, பரீட்சை போனற விபரங்கள் தபால் ஊடாக அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: **Mr.N.Sujeevan,**
**Asst.Coordinator,**
**Institute for Professional studies (IPS),**
**92/1 Sir.Pon.Ramanathan Road, Jaffna.**

➢விண்ணப்ப முடிவு திகதி: 25-12-2009.

**Interested? Talk to us! Our friendly staff in Colombo will be happy to answer your questions. Call Brinda or Dilani on 2301920.**

**ACCA, Srilanka**

(C-3909)


## கல்வி வெளியீட்டுத் திணைக்கள புத்தக விற்பனை நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் புத்தக விற்பனை நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் மேற்படி புத்தக விற்பனை நிலையத்தை ஆரம்பித்து வைத்தனர். (ச)

## கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ள தொழில் முயற்சியாளர் அபிவிருத்தித்திட்ட கருத்தரங்கின் அங்குரார்ப்பண விழா நாளை சனிக்கிழமை காலை 8மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பயிற்சிப் பட்டறை இல 476, ஆஸ்பத்திரி வீதி, வேம்படிச் சந்தியிலமைந்துள்ள உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் 3 பிரிவுகளாக நடத்தப்படும்.

முன் அனுமதி பெற்றவர்கள் மட்டும் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள இடமளிக்கப்படும்.

பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வோர் நாளை காலை 8 மணிக்கு யாழ். நூலக வளாகத்திற்கு சமுகம் தருமாறு வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் கேட்டுள்ளார். (ச-3)

## மீனவர்களின் படகு காணாமல் போயுள்ளது

(கொழும்பு)

இலங்கை மீனவர்களை ஏற்றிச் சென்ற படகொன்று இந்தியக் கடல் எல்லையில் காணாமல் போயுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என மீன் பிடித்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

காணாமல் போனதாகக் கூறப்படும் படகுடன் இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசித்த மேலும் 7படகுகள் அந்த நாட்டு கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

காணாமற்போன படகு குறித்து உடனடியாக ஆராயுமாறு சென்னையிலுள்ள இலங்கைப் பிரதி உயர்ஸ்தானிகராலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ச-3)

## பரிகாரம் கற்பித்தல் செயலமர்வில் கலந்து கொள்ளாதோருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தால் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற பரிகாரக் கற்பித்தல் செயலமர்வில் பங்குபற்றாத சகல கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களையும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு வலயக்கல்விப் பணிமனை முகாமைத்துவ மண்டபத்திற்கு வருகை தருமாறு கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

## சர்வதேச மனித உரிமைகள்...

இந் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான சங்கையா, தமிழ் ஈழமக் கள் விடுதலைக் கழகத் தலைவர் சித்தார்த்தன், ஈழமக் கள்புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா பிரிவு தலை வர் ஸ்ரீதரன் ஆகியோருடன் ஐக்கியதேசியக் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த் தனா, யாழ். மாநகரமுதல்வர்திருமதியோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாநகர சபை எதிர்க் கட்சித் தலைவர் சட்டத் தரணி முடியப்பு றெமேடியஸ், யாழ். மாநகர சபை உறுப்பினர் மௌலவி சிபியான், மதகுருமார்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என பலநூற்றுக் கணக்கா னோர் திரண்டனர். இதில் அரசியல் தலை வர்கள் தனித்தனியாகமரம் நட்டுமனித உரிமைகள்தினத் தை ஒற்றுமையாக ஆரம்பித்து வைத்தனர்.தொடர்ந்துமனித உரிமைகள் இல்லத்தின்தலைவி, அரசியல் தலை வர்கள், பொது அமைப்புக்களின்பிரதிநிதிகளின்சிறப்புரைகள் நடைபெற்றது. (ச-5)

## மனித உரிமை மீறல்களை...

மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந் தா தெரிவித்துள்ளார். மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு, ஆண்கள், பெண்களுக்கிடையிலான சமத்துவ உரிமைகள் முதற்கொண்டு மனித கௌரவம், சமூக முன்னேற்றம், உயர்ந்த வாழ்க்கைத்தரம் என்பவற்றை நாம் தொடர்ந் தும் வலியுறுத்து வோம்.

பெருமழை பெய்து ஓய்ந்தாலும் தூறல்கள் இன்னமும் ஓயாது என்பது போலன்றி, யுத்தம் ஓய்ந்தா லும் சிறுசிறு வன்முறைகள் கூட எங்கும் நடத்துவிட யாரும் அனுமதிக்க முடியாது.

நடைமுறைச்சாத்தியமான ஒரு வழி முறை யின் மூலம் அடைய முடிந்த அரசியல் தீர்வின் ஊடாக அனைத்து மனித உரிமை மீறல்களை யும் தடுத்து நிறுத்த சகல தரப்பினரும் உறுதி யோடு உழைக்க முன்வரவேண்டிய சூழல் இப் போது உதயமாகியுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பது எமது நீதியான ஆயுதப் போராட்டத்தினால் எமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் அதன் அடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டத் தை முழுமையாக நடைமுறைப் படுத்து வதோடு கட்டம் கட்டமாக கிடைக்க வேண்டிய நியாயமான அரசியல் அதிகாரங்களை பெற்று எமது இலக்கு நோக்கி முன்னேறவும் நாம் தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம்.

உண்பதற்கு உணவில்லை என்று எங்கே ஓர் அழுகுரல் கேட்கின்றதே அங்கேயும் மனித உரிமை மீறல் நடக்கின்றது என்பதை உணர்ந்து உணவு முதற்கொண்டு உரிமைகள் வரைக்கும் பெறுவதற்காக நடைமுறைச் சாத்தியமான வழி முறை நோக்கி அனைத்து மக்களும், அரசியல் சக்திகளும் உறுதியுடன் அணிதிரள வேண்டும் என நான் இன்றைய மனித உரிமைகள் தினத் தில் அறைகூவல் விடுக்கின்றேன். மனித உரி மைகளுக்காகவும், மானுட நீதிக்காகவும், இன ஐக்கியம், இன சமத்துவத் திற்காகவும் அரசியல் உரிமை, சுதந்திரத்திற் காகவும் நாம் தொடர்ந்தும் உறுதியுடன் உழைப் போம் என்றுள்ளது. (ச-5)

## ஜனாதிபதித் தேர்தலின் பின்...

இது தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது, ஜனாதிபதித் தேர்தல் நிறைவுப்பெற்றதும் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு முன் வைக்கப்படும். இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் மீள் குடியமர்த்தப்படுவார்கள் என இந்தியா சென்றுள்ள இலங்கை உயர்மட்டக்குழு தெரி வித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தியா புறப்பட்டுச் சென்ற உயர்மட்ட அரசியல் குழு இந்திய வெளியுறவு அமைச் சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை நேற்று சந்தித்துக் கலந்து ரையாடியுள்ளது. இந்த கலந்துரையாடல் மிக நன்றாக அமைந்ததாக இலங்கைக் குழுவில் அங்கம் வகிக்கும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் உண்டு. எனவே அவர்கள் எதிர்வரும் தேர் தலில் வாக்களிப்பார்கள். தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் நாம் புரிந்துணர்வை கொண்டுள்ளோம். எனவே தேர்தல் நிறைவு பெற்றதும் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும்.

அதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை எப்போதும் இந்தியாவுக்குத்துணையாக நிற்கும். அதன்பாதுகாப் புக்கு உறுதுணை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவினை பெறும் முயற்சிகளை அரசு மிக வும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது அதனொரு அங்கமாகவே இலங்கையின் மூன்று மூத்த அதிகாரிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்தியா புறப்பட்டுச் சென்றனர்.

இக்குழுவில் ஜனாதிபதியின் ஆலோச கரும் சகோதரருமான பசில் ராஜபக்ஷ, ஜனா திபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளரு மான கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (ச-5,3)

## காணாமல் போனோர் குறித்து...

பேணப்படும் என சரத் பொன் சேகா என்னிடம் உறுதி வழங்கினார்.

ஐ.சி.ஆர்.சி. போன்ற சர்வதேச தரப்புகள், சட்டவிரோத முகாம்களுக்கு சென்று முகாம்களை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப் படுமென்றும் பேச்சுக்களின் போது பொன் சேகா தெரிவித்தார்.

தற்போது அரசியல் மாற்றத்தின் பிரகாரம் ஜே.வி.பி. கூட இனப்பிரச்சினைக்கான தீர்விலும், சரணடைந்த போராளிகளுக்கு பொது மன்னிப்பு, விஷேடமான நீதி வழங்கவும், முகாம்களில் உள்ள மக்களை மீள்குடியமர்த் தவும் ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் உடனடியாக மாற்றம் ஏற்படும். கடந்த 30 வருடகாலமாக நீடித்த போர் மற்றும் கடந்த 2002ஆம் ஆண்டு அரசு-புலிகளுக்கு இடையில் ஏற்பட்ட இழுபறிகளுக்கு சம்பந்தப் பட்ட் எல்லோரும் தான் காரணம்.

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் கண்காணிப்புகளை மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான க.வே.பாலகுமாரன் போன்றோர்கள் கைது செய்யப்பட்டார்கள் என முதலில் கூறிய அரசு தற்போது அவர்கள் தொடர்பில் இருட்டடிப்பு செய்துள்ளது என மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். (ச-5)

## பொலிஸ் சேவை...

மகளிர் உயர்தரப் பாடசா லையில் நேற்று மக்கள் பாதுகாப்புக்குழு மற்றும் பொதுமக் களுட னான சந்திப்பின்போது பொதுமகன் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் குறிப்பிட்ட அவர், முதல் தொகுதியாக 600 தமிழ் இளைஞர்களை பொலிஸ் துறைக்குள் உள்வாங்கியுள்ளோம் அவர்களிற்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

மற்றைய தொகுதி இளைஞர்களையும் உள்வாங்கியதும் நீங்கள் குறிப்பிடுவது போல தமிழில் முறைப்பாடு செய்வது தொடர்பாக எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் நீங்கிவிடும். உங்கள் முறைப்பாடுகளை தமிழ் மொழி யிலேயே மேற்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14,7)

## சுயநிர்ணய உரிமையை...

போரினால் சீரழிந்து போயுள்ள இந்த நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் போர்க்குற்றம் இடம்பெற்றதாகவும் சர்வதேச சமூகம் சுட்டிக்காட்டி வருகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் இங்கு இன்று நடைபெறும் மனித உரிமைகள்தின நிகழ்வு வரவேற்கத்தக்கது.

ஜனநாயகத்தின் அடித்தளம் மனித உரிமைகள் என்பது உலகம் அறிந்த உண்மை. இந்த நாட்டில் வாழுகின்ற உரிமை கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் சிறுவர்கள் முதல் முதியோர்கள் வரை யாராக இருந் தாலும் வாழுகின்ற உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் சொந்த மண்ணில் வீடு கட்டி வாழ்வதற்கும் தான் சார்ந்த மதத்தை பின்பற்றுவதற்கும் தனக்கு விருப்பமான அரசியலைத் தெரிவு செய்வதற் கும் உரிமை உண்டு.

ஆனால் இந்த நாட்டில் வாழுகின்ற உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்கப் பட்டுள்ளதா? மனிதனுக்குரிய உரிமை களைப் பாதுகாப்பது அவசியம். இது வரை காலமும் எமது உரிமைகள் மீறப்பட்ட அவ லத்திற்கு மருந்து போட்டுக்கொண்டு, நாளைக் காவது உரிமையோடு எமது சொந்த மண்ணில் வாழ்வதற்கு வழி பிறக்க வேண்டும்.

நாட்டில் இன்றைக்கு இலட்சக்கணக்கான மக்கள் சொந்த மண்ணையிழந்து அகதிகளாக வாழுகின்றனர்.

அத்துடன் போரின் காரணமாக வெளியேற்றப்பட்ட மக்கள் கடந்த 20 ஆண்டுகளாக அகதி முகாம்க ளில் வாழ்கின்றனர்.

ஒவ்வொரு பொதுமகனும் சொந்த மண்ணில் வாழுகின்ற உரிமையை பாதுகாப்பது நாட்டு அரசின் கடமை.

தம்மைத்தாமே ஆளு கின்ற மனிதனுக்குள்ள உரிமை, சுயநிர்ணய உரிமை. இந்நாட்டின் அரசினால் வழங்கப் படுவதுடன் அதனை சர்வதேசமும் உறுதிப்படுத்த வேண்டும் என்றார். (ச-5)


**சிறப்பான ஆரம்பத்துடன்**

தரம் 1 முதல் O/L வரை தமிழ் மொழி மூல, ஆங்கில மொழி மூல வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-3880)

**நியூகோல்டன் ஸ்டார்,**

**யாழ். பல்கலைக்கழக அருகாமையில்**

பட்டப்படிப்புகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், அதனோடு இணைந்த அனைத்து வகையான ஆக்கங்களை மிக விரைவாக செய்து கொடுக்கப்படும்.

➢ ரைப் செற்றிங் -$A_4$- 35/= ➢ பைன்டிங் 2 புத்தகம் - 850/=

எமது நிறுவனத்தின் மேலதிக சேவைகள்

1) Photo Copy 3) Colour Print 5) Lamination
2) Laser Print 4) School Instruments 6) Offset Work

எமது நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழ், ஆங்கில ரைப்செற்றிங் நன்கு தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. யாழ். நகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

226, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம். (4158)

தொலைபேசி இல: 021 222 6951, 077 9522444

**நிரு ரியூசன் சென்ரர்**

கோண்டாவில்

**கல்வியாண்டு 2010**

ஆண்டு 4 முதல் O/L வரை

(வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம் 12.12.2009 சனி, 6 மணி

(C-3903)

**B.Sc. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு: ❶ இப் பட்ட நெறியானது இலங்கைப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
❷ பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி வளாக பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன என்பதனையும் அறியத்தருகின்றோம்.

யாழ். இணைப்பாளர்கள்
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
T.P.No: 222 8148, 222 3208 (4157)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**கண்ணீர் அஞ்சலி**

**பரமலிங்கம் சித்திரவேலாயுதம்**

(இளைப்பாறிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்) வவுனியா

எங்கள் பாடசாலை அதிபர் திருமதி எஸ். சுந்தரேசன் அவர்களின் அன்புச் சகோதரன், பரமலிங்கம் சித்திரவேலாயுதம் வவுனியாவில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைவதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை

பாடசாலை அபிவிருத்திக்குழு

(C-3910)

**நீங்கள் A/L இல் BIO / MATHS பிரிவில் கல்வி கற்றவரா???**

உங்களின் வாழ்க்கையை வழிப்படுத்துவதற்கான இத் துறை சார்ந்த வல்லுனர்களின் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு !!!

❋ விடயம் :- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)
❋ இடம் :- UNI ICT Campus & Nottingham College of London, No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
❋ காலம் :- 13/12/2009 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் (அரச/தனியார்) அதிக வேலை வாய்ப்பையும் வரையறை அற்ற வருமானத்தையும் பெற்றுத்தரும் இக் கற்கை நெறிபற்றிய இவ் இலவச வழிகாட்டல் கருத்தரங்கில் தவறாது ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றி பயன் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!!

☎ முக்கிய குறிப்பு :- எமது இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் இன்றே உங்கள் கைத்தொலை பேசியில் உங்கள் முழுப் பெயர், வதிவிட முகவரி ஆகியவற்றை சரியாக ரைப்செய்து 0777 - 110 862 என்னும் எமது கைத்தொலைபேசி இலக்கத்திற்கு 12/12/2009ற்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்வாறு SMS அனுப்பும் அனைவரும் தவறாது இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுதல் அவசியம்.

அன்றையதினம் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு இக் கற்கை நெறிக்கு விண்ணப்பம் செய்வோருக்கு கட்டணச் சலுகைகள் வழங்கப்படும்!!! இன்றே உடன் SMS அனுப்புங்கள்!!!


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.